Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 28 ஆம் நாள் துல்ஹஜ் 16 (11-5-63) சனிக்கிழமை இதழ் 90

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

# திரு. பீலிக்ஸுக்கு ரூபா 50 ஆயிரம் நஷ்ட ஈடு

## பத்திரிகை மீதான மானநஷ்ட வழக்கில் தீர்ப்பு

### அப்பீல் மனு தாக்கல்

கொழும்பு, வெள்ளி

'லேக்ஹவுஸ்' பத்திரிகை ஸ்தாபனத்தின் மீது இலாகா இல்லாத மந்திரியும், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தொடர்ந்த மான நஷ்ட வழக்கில், மனுதாருக்கு ரூ. 50,000 நஷ்டஈடு கொடுக்கும்படி கொழும்பு கூட்டு மாவட்ட நீதிபதி திரு. பி. ஏ. டி' எஸ். சேனரத்தின இன்று தீர்ப்பளித்தார்.

இலங்கை 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் வெளியான அறிக்கையைப் படிக்கும் சாதாரண மனிதன், திரு. பீலிக்ஸும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும் சதியில் தீவிர பங்கு கொண்டிருந்தார்கள் என்றோ, அல்லது அதற்குப் பிரதான காரணஸ்தர்களாய் இருந்தார்கள் என்றோதான் கருதுவாராதலால், இந்த அறிக்கையைப் பிரசுரித்தது மானநஷ்டத்திற் குரியது என நீதிபதி தமது தீர்ப்பில் அறிவித்துள்ளார்.

கொழும்பு தெற்கு முதலாவது எம். பி. திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, கண்டியில் நிகழ்த்தியதாகக் கூறப்பட்ட ஒரு பேச்சை, 1962 பிப்ரவரி 27-ம் திகதி இலங்கை 'டெயிலி நியூஸ்' பத்திரிகை பிரசுரித்ததாக, திரு. பீலிக்ஸ் 'லேக்ஹவுஸ்' ஸ்தாபனத்தின் மீது ஒன்றரை லட்சம் ரூபா கோரிமான நஷ்ட வழக்கு தொடர்ந்திருந்தார்

தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்போவதாக 'லேகஹவுஸ்' பத்திரிகை சார்பாக நீதிபதிக்கு அறிவிக்கப்பட்டது

## மானிப்பாய் - கச்சேரி புதிய பஸ் சேவை

### 15-ம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

பஸ் பிரயாணிகளின் வசதிகளை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போ இம்மாதம் 15-ம் திகதி முதல் ஒரு புதிய சேவையை ஆரம்பிக்கவிருக்கிறது. இப்புதிய சேவையினல், பஸ் பிரயாணிகளின் கஷ்டம் சிறிது நீங்கும் எனத் தெரியவருகிறது.

புதிய பஸ் சேவை, யாழ்ப்பாணம் கச்சேரியடிக்கும் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குமிடையே ஆரம்பிக்கப்படவிருக்கிறது. மானிப்பாய் ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் கச்சேரியடிக்குச் செல்ல விரும்பும் பஸ் பிரயாணிகள், இனிமேல் மானிப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்குவந்து, பின்னர் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து கச்சேரியடிக்கு பஸ் எடுக்கத் தேவையில்லை. மானிப்பாய் ஆஸ்பத்திரியடியில் பஸ் ஏறும் பிரயாணிகள் அதே பஸ்ஸில் யாழ்ப்பாணம் கச்சேரியடியை அடையலாம். இந்த பஸ் மானிப்பாய் ஆஸ்பத்திரியிலிருந்து புறப்பட்டு ஆனைக்கோட்டை வழியாக யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை அடையும். பின்னர், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து கச்சேரியடிக்குச் செல்லும். மானிப்பாயிலிருந்து கச்சேரியடிக்குச் செல்பவர்கள் எந்த இடத்திலும் இறங்கி ஏறத் தேவையில்லை. இந்த வழியாக ஒவ்வொரு நாளும் மொத்தம் 4 பஸ்கள் ஓடும்.

(8ம் பக்கம் பார்க்க)

## படகு கவிழ்ந்து 5 பேர் பலி!

### எழுவை தீவுக்கருகில் கடல் விபத்து

யாழ்ப்பாணம், சனி

எழுவைதீவிலிருந்து ஊர்காவற்றுறைக்கு ஒரு நோயாளியுடன் வந்துகொண்டிருந்த ஒரு படகு நேற்றுக் காலை 10 மணிக்குக் கவிழ்ந்ததின் காரணமாக, அதிலிருந்த 3 ஆண்களும், 1 பெண்ணும், 12 வயதுச் சிறுவன் ஒருவனும் நீரில் மூழ்கி மாண்டனர். திடீரென ஏற்பட்ட சுழல் காற்றும், மழையுமே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

இக் கோஷ்டியினர் எழுவை தீவிலிருந்து ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு நோயாளியை அழைத்துவந்தனர். நடுக் கடலில் ஏற்பட்ட இந்த விபத்தில் படகோட்டி மட்டுமே உயிர் தப்பியதாகத் தெரிகிறது. இரு கடற்படை மோட்டார் வள்ளங்களின் உதவியைக்கொண்டு பொலிசார் சடலங்களைத் தேடிவருகின்றனர். இன்னும் அவைகள் மீட்கப்படவில்லை.

ஊர்காவற்றுறைப் பருத்தியடைப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகேசு என்பவர் நீரில் மூழ்கியவர்களில் ஒருவர் எனக் கூறப்படுகிறது.

## "விருந்தில் கலக்கமாட்டோம்"

— எஸ். ஜே. வி.

கொழும்பு, சனி

இன்று மாலை 7 மணி முதல் 8 மணி வரை இராணிமாளிகையில் நடைபெறவிருக்கும் அரசாங்க விருந்தில் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும், இதர தமிழரசுக்கட்சி எம். பி.க்களும், உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரமும் கலந்துகொள்ள மாட்டார்கள் என அறிவிக்கப்படுகிறது. தமிழ்மக்களை அரசாங்கம் நடத்தும் முறையின் காரணமாக, விருந்தில் கலந்துகொள்ளுமாறு விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியாமலிருப்பதாக கவர்ணர்ஜெனரலுக்கு திரு. செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

## 'வெளியார்களை மந்திரியாக நியமிக்கக் கூடாது'

### பாராளுமன்றக் குழுவில் தீர்மானம்

கொழும்பு, வெள்ளி

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே மந்திரிசபைக்கு நியமிக்கப்பட வேண்டுமென்று கோரும் தீர்மானமொன்றை போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. டி. பி. தென்னக்கூன் அரசாங்க பாராளுமன்றக் கட்சியிடம் சமர்ப்பித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாத வெளியார்களை, மந்திரிகளாக நியமிக்க நடக்கும் எந்த முயற்சியையும் எதிர்க்கப்போவதாய் பெருந்தொகையான அரசாங்க எம். பி.க்கள் தம்மிடம் வாக்குறுதியளித்திருப்பதாக திரு. தென்னக்கூன் கூறினார்,

வெளியார் எவரும் மந்திரிப் பதவிக்கு நியமிக்கப்படுவதாக சிறிய அறிகுறி தென்பட்டபோதிலும், அரசாங்கக் குழுவின் விசேஷக் கூட்டத்தை நடத்தத் தயங்கப்போவதில்லை என அநேக அங்கத்தினர்கள் கூறியிருப்பதாயும் அவர் தெரிவித்தார்.

## புடவைகளை களவெடுத்த பெண்கள் இருவர்

### கையும் மெய்யுமாக பிடிபட்டனர்

யாழ்ப்பாணம், சனி

நேற்றிரவு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள ஒரு கடையில் புடவை வாங்கச் சென்ற இரு பெண்களும், ஒரு சிறுமியும் ரூ. 150 பெறுமதியான 2 சேலைகளைக் களவெடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்ற பின், வழியில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

சந்தேகத்தின் பேரில் இவர்களைத் தொடர்ந்து சென்ற ஸ்தாபன சிப்பந்தி ஒருவர், அவர்களை மீண்டும் கடைக்கு அழைத்து வந்து சோதித்த போது, களவு அம்பலமானது அங்கு கூடியிருந்த சிலர் தலையிட்டதன் பேரில், அவர்கள் எச்சரித்து அனுப்பப்பட்டனர்.

## இலங்கரத்ன ஜெனிவா பயணம்

கொழும்பு, சனி

வர்த்தக உணவு மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன நேற்று ஜெனிவாவிற்கு பயணமானார். இம்மாத இறுதியில் நடைபெறும் வர்த்தக மகாநாட்டில், இலங்கையின் பிரதிநிதியாக இவர் கலந்துகொள்ளுவார்.

மந்திரி இலங்கரத்ன மத்திய கிழக்கு நாடுகளுக்கும் வர்த்தக சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த விஜயம் செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, மே 10

ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நாளை ஆப்கானிஸ்தானிலும், ஈரானிலும் 11 நாள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு நாளை புறப்படுவார்.

நாளை காபூலில் ஆப்கன் மன்னர் அவருக்கு விருந்தளிப்பார். ஆப்கானிஸ்தானிலிருந்து ஈரான் சென்ற பின், மன்னர் ஷா அவருக்கு விருந்தளிப்பார். ஈரானில் டெஹ்ரான் நகரின் திறவுகோல் அவருக்கு அளிக்கப்படும். டெஹ்ரான் பல்கலைக்கழக விசேஷ பட்டமளிப்பு விழாவில் ராதாகிருஷ்ணன் கலந்துகொள்வார். நகரமேயர் அளிக்கும் விருந்திலும் கலந்துகொள்வார்.

## வரி விளம்பரம்

### தேவை

டிலிவறி கிளாக்குகள் தேவை. தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

ஸ்ரீ லங்கா சலவைத்தொழிற் சாலை, கே. கே. எஸ். ரோட், சுன்னுகம். கிளை: 27, பண்ணை ரோட், யாழ்ப்பாணம். 986

### கார் றைவிங்

பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு றைவிங் பழக்கி நன் மதிப்புப் பெற்ற அனுபவம் வாய்ந்த ஸ்தாபனம் மருதம்ஸ் மோட்டரிங் ஸ்கூல்.

ஆக நூறுரூபாய் செலவில் ஒருகிழமைக்குள் தற்காலப் போக்குவரத்து விதிகளுக்கமைய தெரு ஒழுங்குப் பிரமாணங்களுடன் முழு றைவிங்கும் சிறந்த முறையில் கற்றுக் கொடுக்கின்றோம்.

டெலிபோன் இல: 7185.

மருதம்ஸ் மோட்டரிங் ஸ்கூல், 97, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 988

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலாக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


### மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றும் திருமதி ஆர். சூசையாவின் மகன் றெஜினல்ட் ஜெயநேசன் காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் கொன் சேன்சஸ் மாதா சேமக்காலையில் 10-5-63 பி. ப. 4 மணிக்கு நடைபெற்றது.

ஆ. செந்தில்நாயகம், காரியதரிசி ம. ச. க. 991

## யாழ்ப்பாண மாநகரசபை கேள்விப்பத்திர அறிவித்தல்

14-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சிறும்பியடியில் உள்ள கால்வாய்க்கு தாங்குசுவர் கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 16-5-63 நண்பகல் 12 மணி வரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாண மாநகரசபை மராமத்து என்ஜினியரிடமிருந்து 14-5-63 பி. ப. 3 மணி வரை பெறக்கூடிய படிவங்களின் இணைப்பிரதியில் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். கட்டுப்பணமாக ஐம்பது ரூபாயும் (ரூ. 50-00) கேள்விப்பத்திரப் படிவப் பணமாக ஐந்து ரூபாயும் (ரூ. 5-00) செலுத்தி படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். படிவப் பணம் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரருடன் ஒப்பந்தம் செய்து கொண்டபின்னர் கட்டுப்பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களை வேலை நேரங்களில் மாநகரசபை மராமத்து என்ஜினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

டி. டி. ஜெயசிங்கா,
மாநகரசபைக்கமிஷனர்,
4-5-63 யாழ்ப்பாணம்.
1002

## அமெரிக்கா செல்வார்

கிளிநொச்சி, வெள்ளி

கனகபுரம் இளைஞர் விவசாயக்கழகத்தைச் சேர்ந்த சவரிமுத்து பீட்டர் ஜெயராஜ் அமெரிக்க விவசாயப்பண்ணைகளைப் பார்வையிடுவதற்கு, இலங்கை அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

அமெரிக்காவில் இவர் 6 மாத காலம் தங்கி, அங்குள்ள விவசாயப் பண்ணைகளையும் திட்டங்களையும் பார்வையிடுவதோடு, கைத்தொழில் முதலிய துறைகளையும் அறிந்து வருவார்.

# தந்தைசொல் தாங்காது தனயன் தற்கொலை

மாவிட்டபுரம், வெள்ளி

கல்வியில் அக்கறைகாட்டாத படியால் இரு தடவை எஸ். எஸ். ஸி. பரீட்சையில் தவறிய மகனை கமத்தொழிலிலும் அக்கறை காட்டவில்லையென்று தந்தை கண்டித்ததைத்தொடர்ந்து தோட்டத்தில் இருந்த கிருமிநாசினியை எடுத்து குடித்து பத்தைமேனியைச்சேர்ந்த ஞானப்பிரகாசம் மலாக்கயர் என்னும் 22 வயதுடைய மாணவன் மரணமானார்.

மரண விசாரணையின்போது மரியாம்பிள்ளை ஞானப்பிரகாசம் கூறியதாவது:-

காலஞ்சென்ற எனது மகன் இருதடவை எஸ். எஸ். ஸி. சோதனை எடுத்து தேறவில்லை. படிப்பில் அக்கறை எடுப்பதில்லை என்று பல தடவை கூறியுள்ளேன், நேற்று தோட்டத்திற்கு 2 மணிக்கு வரும்படி கூறிவிட்டு நான் முதலில்தோட்டத்திற்கு சென்றேன். மகன் நாலரை மணிக்கே தோட்டத்திற்கு வந்தான். அவன் தாமதமாகவந்ததைக் கண்டித்தேன் படிப்பிலும் அக்கறையில்லை தோட்டவேலையிலும் கவனமில்லை யென்று கூறினேன். உடனே மகன் "நஞ்சு குடிச்சு சாகிறேன் பார்" என்று கூறிவிட்டு ஓடினன். என்னுல் அவனைத் தொடர்ந்து ஓடமுடியவில்லை.

ஜோசப், செல்வராசா ஆகியவர்களிடம் விஷயத்தைச் சொல்லி மகனைப்போய் தடுக்கும்படிசொன்னேன். அவர்கள் போகுமுன் மகன் கிருமிநாசினியைக் குடித்துவிட்டதாகவும் தாங்கள் போத்தலைப் பறித்துவிட்டு, மயங்கி கீழே விழுந்த மகனை தூக்கிவரும் வழியில் இறந்துவிட்டதாகவும் கூறினர்கள்.

ஜோசப், செல்வராசா ஆகியோரும் சாட்சியமளித்தார்கள்.

மரணவிசாரணையின் போது சமுகமளித்திருந்த கோப்பாய் எம். பி. பாலசுந்தரம் கிருமிநாசினி விற்பனவைக் கட்டுப்படுத்துவதுபற்றி சம்மந்தப்பட்டவர்களுடன் தான் பேச்சுவார்த்தை நடத்துவதாக மரணவிசாரணை அதிகாரியிடம் தெரிவித்தார்.

தற்கொலையால் மரணம் சம்பவித்ததென்று மரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் தீர்ப்பளித்தார்.

## தொல்புரத்தில் எழுந்திருப்பு வைபவம்

தொல்புரம், வெள்ளி

தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை எழுந்திருப்பு வைபவமும், சித்திரபுத்திரனர் கதைப்படிப்பும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டது. இத்தினத்தன்று அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும், பூசை ஆராதனைகளும் நடைபெற்றன. அம்பாள் வீதிவலம் வந்த பின்னர் ஆலயத்தில் நின்றோர் அனைவருக்கும் சித்திரைக் கஞ்சி வார்க்கப்பட்டது.

ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 17-ம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறும்.

## பிரிவுபசாரம்

நயினாதீவு, வெள்ளி

நயினாதீவு தெற்கு கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் நயினாதீவு கணேசா சன சமூக நிலைய மண்டபத்தில் கிராமாதிகாரியாக இருந்து இளைப்பாறும் திரு. கா. க. சிவசிதம்பரத்துக்கு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

கிராமச்சங்கத் தலைவர் திரு. க. வே. பரமலிங்கம் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். திருவாளர்கள் சு. கதிரேசு, பெ. துரைச்சாமி, கு. சாந்தலிங்கம், அ. நல்லையா, நா. விசுவலிங்கம், கா ஆறுமுகம் ஆகியோர் கிராமாதிகாரியின் சேவை நலன்களைப் பாராட்டிப் பேசினர்.

## மூன்று மாதம் சிறை

மாவிட்டபுரம், வெள்ளி

கன்னியங்காட்டைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை யோசேப் என்பவருக்குச் சொந்தமான 120 ரூபா பெறுமதியான றலி சயிக்கிளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மனுவல் அந்தோனிப்பிள்ளை அல்லது ராஜதுரை என்பவர் ஏழாலையில் வைத்து நம்பிக்கை மோசடி செய்ததாக சுன்னுகம் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெள்ளி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளபபட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி எதிரிக்கு 3 மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.


## விலாச மாற்றம்

கடந்த 20 ஆண்டுகளாக
யாழ்ப்பாணம் எஸ். சுப்பிரமணியம் அன்ட் கோ.
மருந்துக்கடையில் நிர்வாகஸ்தராகக் கடமை செய்த

### ஆயுர். டாக்டர் எம். எஸ். சுந்தரம்

ஆகிய என்னை இனிமேல் கீழ்க்கண்ட விலாசத்தில் சந்திக்கலாமென்பதை அன்பர்கள் ஆதரவாளர்கள் யாவருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## சுந்தரம் பிறதர்ஸ்

மருந்துச் சரக்குகள், மருந்துகள், வாசனைப் பொருட்கள்
விற்பனையாளர்

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(புதிய பஸ் நிலையத்திற்கு அருகாமை)



## BIOLOGY

in English
(For G. C. E. Ord. Level)

By
**Ramakrishnan** and **Puthrasingam**

This book caters fairly fully for the G. C. E. ord. level syllabus. The book had been written with a functional and ecological bias. In conformity with the amended syllabus in Biology, matter has been completely revised to cater to its needs. New and large diagrams had been added. The authors feel that this book will be useful to both teachers and students of natural science.

The book had been approved by the Director of Education as a class text.

Copies can be had from all leading book sellers.

400 Pages Price 11-25 300 Diagrams

The Tamil edition of Biology (உயிரியல்) can also be had from leading book sellers.



# உங்கள் கைகளைக் கொண்டு உங்கள் சீவியத்தை அறியுங்கள்



கவலைபடையாதீர்!

விந்தை மனிதன் பேராசிரியர்

## விந்தாவை

கலந்து உங்கள் சிக்கல்களைத் தீருங்கள்
உங்கள் எதிர்காலத்தைத் தெளிவான இரகசிய அறிவினுல் அறியுங்கள்

### இவை உங்கள் கஷ்டங்களா?

காதல், திருமணம், தொழில், வழக்கின் எதிராளிகள், வேலையின்மை, தேர்வில்சித்தி, மாதர்குறைகள், களவபோன பொருளை அல்லது காணுமற் போனவர்களைக் கண்டுபிடித்தல், பேய், பில்லி, சூனியம், ஏவல் முதலிய தீயசக்திகளில் இருந்தும் பாதுகாப்பு, சுகயீனம், விபத்து இன்ன பிறவற்றுல் ஏற்படும் தடைகள், கஷ்டங்கள். இவற்றில் நீங்கள் வெற்றியீட்டலாம்.

அமாவாசையின் போது தயார் செய்யப்பட்ட வீரபத்திரக் கடவுளின் கவசம்— இது ஒருவருட உத்தரவாதம் உள்ளது. விலை ரூ. 3-50. கிரகணத்தின்போது தயாரிக்கப்பட்ட கவசத்தின் இரண்டு வருட உத்தரவாதம் உள்ள விலை ரூ. 7-50. எட்டுக்கிரக சேர்க்கையின் போது தயார் செய்யப்பட்டு $3\frac{1}{2}$ வருட உத்தரவாதத்துடன் கூடிய கவசம் ரூ. 17-50. இக்கவசங்கள் வெற்றி, சுகம், பிரசவம், கல்விகற்க முடியாத மாணவர்களுக்கும் கீழ்ப்படிவில்லாத பிள்ளைகளுக்கும் உதவி முதலியவற்றிற்கு உத்தரவாதமும், சாரதிகளுக்கும், பிரயாணிகளுக்கும், பலவீனமாயுள்ளவர்களுக்கும் பாதுகாப்பு மற்றும் தீராத நோயினுல் பீடிக்கப்பட்டு வருந்தும் நோயாளிகளின் நோய் தீர்வதற்கும் உத்தரவாதம். இவற்றை உபயோகிப்பதால் விரைவான பலன் கிடைக்கும்.

தன் எதிர்காலம்பற்றி அறியாதவன் குருடனுக்கு ஒப்பாவான், வாழ்க்கையின் வளங்கள் யாவும் பெற்றிருப்பினும் ஒருவன் என்ன நடைபெறுகின்றது என்பதைப் பார்க்கவோ, அறியவோ முடியாது போயின் அவன் சக்தியற்றவனுவான். மழை காலத்தில் குடை பிடித்துத் தற்காப்பது போல உங்கள் எதிர்காலததை அறிவதன் மூலம் பாதுகாப்புச் செய்யலாம்.

அகில உலகப் புகழ்பெற்ற ஊடுருவிப் பார்க்கும் சோதிட—கைரேகை

**பேராசிரியர் விந்தா**

இந்த ஐந்து கேள்விகளுக்கும் ரூ. 2/- கட்டணத்துடன் பதிலளிக்கிறார்.

(1) எனது தொழில் சுபிட்சமானதாக அல்லது எனது உத்தியோகம் முன்னேற்றமானதாக இருக்குமா?
(2) (குதிரைப்) பந்தயங்களின் மூலம் பணம் பெற்று நான் வெற்றியீட்ட முடியுமா?
(3) எனது வாழ்வின் சிறந்த வருடம் எது?
(4) நான் இவ்வுலகில் எவ்வளவு காலம் வாழ விதிக்கப்பட்டுள்ளேன்?
(5) எனது தற்போதைய கஷ்டங்களிலிருந்து எப்போது நிவாரணம் பெறுவேன்?

கம்றூப், வங்காளம், இமயமலை ஆதிய இடங்களுக்குச் சென்று யாகிகளுடகன் பழகி மந்திரங்கள், சாஸ்திரங்கள் யாவும் கற்று வந்துள்ள பேராசிரியர் விந்தாவைக கேளுங்கள். கேட்டுப் பயன் பெறுங்கள்.

### சோதிடம் போலக் கைரேகை

நடந்தகாலம், நடக்கும்காலம், வருங்காலம் ஆதிய முக்காலங்களினதும் விரிவான சீவியகாலக் குறிப்புகள் வருடம் வருடமாகப் பிரித்து எழுத ரூ. 100/-
தசாவிதிப்படி விபரம் எழுதுவதற்கு ரூ. 50/-
முக்கிய நிகழ்ச்சிகள், உண்மைகள் விபரம் எழுத ரூ. 25/-
பொதுவான விபரமான சீவியக் குறிப்புகள் எழுத ரூ. 15/-
பி. கு.: பெண்களின் விசேஷ கவனிப்பிற்கு திருமதி சி. கே. ஜி. விந்தா பி. ஏ. தயாராய் இருக்கிறார்.

ஆலோசனை நேரம்:
காலை 8—மதியம் 12.
பி. ப. 1 — மாலை 7.

தற்போதைய விலாசம்:
அறை இல. 3,
பரணி ஹோட்டல்,
ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

வி-ம் 1001

ஜூன் மாதம் 15-ம் திகதிவரை நாங்கள் பரணி ஹோட்டலில் தங்கியிருப்போம்.

# வடக்கு ஸிரியாவில் ஊரடங்கு சட்டம் அமுல்!

## பலர் மரணம்; 300 பேர் கைது

### நாஸரின் ஆதரவாளர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம்

டமாஸ்கஸ், மே 9

வடக்கு ஸிரியாவிலுள்ள அலெப்போ என்ற நகரத்தில் ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது. கடந்த சிலதினங்களாக நாஸரின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்துவருவதைத் தொடர்ந்து ஸிரியாவில் நேற்று 300 பேர்கைது செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களின்மீது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏராளமானபேர் கொல்லப்பட்டனர்என்றும் பலர் காயமடைந்தனரென்றும் டமாஸ்கஸ் செய்திகள் கூறுகின்றன.

**300 பேர் கைது**

நாஸருக்கு ஆதரவானவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்து 300 பேர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். நாஸரின் ஆதரவு நிறைந்த மாகாணமான கலஸாவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதைத் தொடர்ந்து வடக்கு ஸிரியா நகரமொன்றில் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

**பத்திரிகைக்குத் தடை**

டமாஸ்கஸ் நகரத்திலிருந்து வெளிவரும் நாஸருக்குச்சார்தகமான இரண்டு தினசரிப்பத்திரிகைகளின் லைசென்ஸுகள் பறிக்கப்பட்டுள்ளன என்றும் இந்தப் பத்திரிகைகளின் உரிமையாளர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பெருட்டிலிருந்து வெளியான செய்திகள் கூறுகின்றன.

நாஸருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களில் அநேகர் பாடசாலைக் குழந்தைகள். பாடசாலைக் குழந்தைகளுக்கும் பொலிஸாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் சிலர் காயமடைந்தனர். பலர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

**எட்டு மந்திரிகள் ராஜினமா**

கடந்த சில தினங்களாக நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து ஸிரிய அரசாங்கத்தைச் சேர்ந்த ஆறு மந்திரிகள் ராஜினமாச் செய்துள்ளனர். இவர்களுடன் இதுவரை மொத்தமாக எட்டு ஸிரிய மந்திரிகள் ராஜினமாச் செய்துள்ளனர். ஸிரியா மக்களின் விருப்பத்துக்கு எதிரான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக ராஜினமா செய்த மந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

---

# மாஸ்கோவில் உயர்கட்ட பேச்சுகள்

## சீன-சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஜூனில் கூடும்

பீக்கிங், மே 10

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே நிலவும் அபிப்பிராய பேதங்களை நீக்கும்பொருட்டு பேச்சுவார்த்தைகளை நடாத்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தூதுகோஷ்டி ஒன்று ஜூன் மாதத்தில் மாஸ்கோ செல்லும் என்று நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே நிலவும் அபிப்பிராய பேதங்களை நீக்கும்பொருட்டு பேச்சுவார்த்தைகளை நடாத்த உயர்தர மகாநாடு ஒன்றைக் கூட்டவேண்டுமென்று ஒரு சில மாதங்களுக்கு முன்னர் சீன கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியைக் கேட்டிருந்தது.

இருகட்சிகளுக்குமிடையே நிலவும் அபிப்பிராய பேதங்களை நீக்கும்பொருட்டு பேச்சுவார்த்தைகளை நடாத்த பீக்கிங்குக்கு வரும்படி சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் ரஷ்யப் பிரதமர் திரு. குருஷ்சேவை அழைத்திருந்தார்.

ஆனல் மாஸ்கோவிலிருந்து வெளியான செய்திகளின்மூலம் சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் பீக்கிங் செல்லமாட்டார் எனத் தெரியவருகிறது. பிரதமர் திரு. குருஷ்சேவ் பீக்கிங் செல்லாவிட்டால், சீனத்தலைவர் மா-ஸே-துங் மாஸ்கோ செல்வார் என்று ஒரு செய்தி கூறுகிறது. இது குறித்து நவசீன செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கையில்; சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே நிலவும் அபிப்பிராய பேதங்களை நீக்க இருநாட்டுத் தலைவர்களும் அடுத்த மாதத்தில் பேச்சுக்கள் நடத்துவார்கள் என்றும், மா-ஸே-துங் மாஸ்கோ செல்லாவிடில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தூதுகோஷ்டியொன்று அடுத்த மாதம் மாஸ்கோ செல்லுமென்றும் உயர்கட்ட பேச்சுக்கள் நடைபெறுமென்றும் கூறியது.

கட்சிப் பேதங்களை நீக்கி சமரசம் ஏற்படுத்த உதவும் பேச்சுக்கள் இம்மாத மத்தியில் பீக்கிங்கில் நடைபெறுமென்றும் திரு. குருஷ்சேவ் பீக்கிங் வருவார் என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல், பீக்கிங்குக்கு பிரதமர் குருஷ்சேவ் வரமாட்டார் என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் பிரதிநிதிகள் மாஸ்கோவுக்கு அடுத்த மாதம் செல்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜூன் மாதத்தில் மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் பேச்சுக்கள். உயர் கட்டத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## குழந்தை இலக்கிய மகாநாடு

### சென்னையில் நடைபெறும்

சென்னை, மே 10

குழந்தை எழுத்தாளர் சங்க ஆதரவில் மே 19-ம், 20-ம் திகதிகளில் சென்னையில் நடைபெறவிருக்கும் மூன்ருவது குழந்தை இலக்கிய மகாநாட்டை பாரத உப ராஷ்டிரபதி டாக்டர் ஸகிர் ஹுசேன் துவக்கி வைப்பார்.

குழந்தைகளுக்கான இலக்கியத் தொகுப்பும் குழந்தை இலக்கிய மலரும் இம்மகாநாட்டையொட்டி வெளியிடப்படும்.

---

## 19 பேர் கைது

ஜெய்ப்பூர், மே 10

ஜெய்ப்பூரில் உணவுப் பொருள்களின் விலைப்பட்டியலை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கத் தவறிய 19 கடைக்காரர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

---

## வவனியாவில் சிரமதான இயக்கம்

வவனியா, வெள்ளி

வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவில் கோயில் குளம், சமளம் குளம், வீதியமைப்பு வேலையை சிரமதான இயக்க மூலம் ஸ்தலஸ்தாபன உதவி ஆணையாளர் திரு. என். சிவராசா வேலையை ஆரம்பித்து வைத்தார்கோயில்குளம்சமளம் குளம் கிராம முன்னேற்றச் சங்கத் தொண்டர்கள் இவ்வியக்கத்திற்கு கூடிய ஆதரவு கொடுத்து 2 மைல் நீளமுள்ள வீதியையும் 24 நாட்கள் வேலை செய்து முடித்தனர். அப்பகுதியிலுள்ள மக்கள் தங்களாலியன்ற பொருளுதவியும் சரீர உதவியும் கொடுத்து இவ்வியக்கத்தை வெற்றிகரமாக நடத்தி முடிக்க உதவி புரிந்தனர். கிராம முன்னேற்ற உத்தியோகத்தர் திரு. என். நவரத்தினம் மேற்பார்வையின் கீழ் தொண்டர்கள் வேலை செய்து காடு வெட்டி, கான் வெட்டி வீதி அமைத்தனர். இவ்வியக்கத்தை காரியாதிகாரி திரு. முருகேசம்பிள்ளை ஒழுங்கு செய்தார்.

---

## வருமானத்தில் குறைவு

கொழும்பு, வெள்ளி

மாகாண விகிதங்களின்படி 1963-64 வருடத்திற்கான வருமானத்தில் 1962-63 நிதிவருடத்திற்கான வருமானத்திலும் பார்க்க 3½ கோடி குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்க பகுதியினர் தெரிவித்துள்ளனர். 1963-64 நிதிவருடத்திற்கு 60 கோடி ரூபா தற்குறைவு ஏற்படக்கூடுமென தெரியவருகிறது.

1962 - 63 ஆண்டுகளுக்கு மதிக்கப்பட்டுள்ள வருமானம் ரூபா 1, 661, 653,597. அடுத்த ஆண்டுக்கு மதிக்கப்பட்டுள்ள வருமானம், சுமார் 1, 626 கோடி ரூபா.

சுங்கஇலாகாவில் ஏற்பட்டுள்ள கடுமையான சட்டங்கள் காரணமாகவே 1963-64 ஆண்டுகளுக்குள்ள வருமானத்தில் அதிகம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

சுங்கஇலாகா, வருமானவரி, கலால்வரி, ஆகியவற்றிலிருந்தே அதிகமான வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

வருமானத்தில் அதிகமான பணம் உணவுநீர்ப்பாசன அமைச்சுக்கே ஒதுக்கப்படுமெனவும், அடுத்தபடியாக போக்குவரத்து அமைச்சுக்கும், கைத்தொழில் அமைச்சுக்கும் ஒதுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

# ஜார்ஜ்டவுனில் பிரிட்டிஷ் துருப்புகள்

## பழைய சம்பவம் மீண்டும் நிகழுமா ?

ஜார்ஜ்டவுனி, மே 10

பிரிட்டிஷ் கயானவில் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்ட ஒன்பது மணித்தியாலங்களுக்குப் பின்னர் பிரிட்டிஷ் கூட்டமொன்றில் பிரிட்டிஷ் துருப்பினர் ஜார்ஜ்டவுனை வந்தடைந்தனர்.

பிரிட்டிஷ் கயானவில் நேற்றுமுன்தினம் அவசரகால நிலையை பிரிட்டிஷ்கயான பிரதமர் செட்டிஜகன் பிரகடனம் செய்தார். அரசாங்க தொழில் மசோதாவை எதிர்த்து கடந்த மூன்றுவார காலமாக வேலைநிறுத்தம் இங்கு நடைபெற்று வருகிறது. இது சம்பந்தமாக தொழிற்சங்க கவுன்சிலுக்கும் அரசாங்கத்துக்குமிடையே அண்மையில் நடைபெற்ற பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டதைத் தொடர்ந்தே இங்கு அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

1962-ம் ஆண்டில் பிரிட்டிஷ் கயானவில் அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்ட பொழுதும் இங்கு பிரிட்டிஷ் துருப்பினர் அனுப்பப்பட்டிருந்தனர். அப்போது நடைபெற்ற சம்பவங்களில் ஐவர் கொல்லப்பட்டனர். 300 பேர் காயமடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். ஜார்ஜ் நகரத்தின் வியாபாரம் பெரும் மந்தநிலையை அடைந்திருந்தது.

1962-ம் ஆண்டில் ஏற்பட்ட சம்பவங்கள் மீண்டும் நிகழுமா என்று இங்கு பலர் கவலை கொண்டுள்ளனர்.

---

# திரு. பங்கர் நடுநிலைமை வகிக்கலாம்?

## காஷ்மீர் மீதான மத்தியஸ்த யோசனைக்கு நேரு இணக்கம்

வாஷிங்டன், மே 10

பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு நடுநிலைமையாளர் அல்லது ஒரு கோஷ்டி உதவவேண்டுமென்ற பிரிட்டனின் ஆலோசனையைப் பாரதப் பிரதமர் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இரண்டு நாட்டுப் பிரச்னைகளையும் தீர்க்கும் நடுநிலைமையாளராக திரு. எல்ஸ்வேர்த் பங்கர் நியமிக்கப்படலாம் என விஷயமறிந்த சில வட்டாரங்கள் கூறுகின்றன. திரு. எல்ஸ்வேர்த் பங்கர், முன்னர் இந்தியாவில் அமெரிக்க தூதராகக் கடமையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

15 வருட காலமாகப் பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இருந்துவரும் காஷ்மீர் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் அமெரிக்காவும், பிரிட்டனும் அதிக அக்கறை எடுத்துவருகிறது. காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகளையும் தீர்த்து வைக்கும்பொருட்டு, பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே இதுவரை ஐந்து சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும் காஷ்மீர் பிரச்னையில் முன்னேற்றம் எதுவும் அவ்வளவாகக் காணப்படவில்லை. ஆனல், காஷ்மீர் பிரச்னைமீது மத்தியஸ்தம் வகிக்கப்படுமா இல்லையா என்பது இம்மாதம் 15-ம் திகதி புதுடில்லியில் நடைபெறும் பாரத-பாகிஸ்தான் ஆருவது சுற்றுப்பேச்சுக்களின் பின்னர்தான் தெரியவரும் என்று ராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

காஷ்மீர் தகராறைத் தீர்த்துக்கொள்வதில் நடுநிலைமையாளராக யார் நியமிக்கப்படுவார் என்பது இன்னும் நிச்சயமாக முடிவு செய்யப்படாத போதிலும் மூவரின் பெயர்கள் இப்பொழுது அடிபடுகின்றன.

முன்னர் மேற்கு இரியனின்; ஏமன் தகராறுகளுக்கு நடுநிலைமையாளராக நின்று தகராறைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தவரும், முன்னர் இந்தியாவில் அமெரிக்க தூதுவராகக் கடமையாற்றிவருமான திரு. எல்ஸ் வேர்த் பங்கர்; அமெரிக்க ராஜாங்க உதவிக் காரியதரிசி திரு. பிலிப்ஸ் தல்பொட்; காங்கோவின் அமெரிகத் தூதர் திரு. எட்மண்ட் குலியன் ஆகிய மூவரில் ஒருவர் நடுநிலைமையாளராக நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. ஆனல் திரு. எல்ஸ்வேர்த் பங்கர் நியமிக்கப்படலாம் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

காஷ்மீர் தகராற்றை, மத்தியஸ்தம் வகிப்பதன்மூலம் தீர்க்கவேண்டுமென்ற பிரிட்டனின் யோசனையை, அமெரிக்காவும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

---

## தேசியக்கல்வி திட்டம்

### அமுலுக்கு வரும் என்கிறர் உதவி மந்திரி

பலாங்கொடை, வியாழன்

"எத்தனை இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் தேசிய கல்வித் திட்டத்தை அரசாங்கம் அமுல் நடத்தியே தீரும்" என்று உதவிக் கல்வி மந்திரி திரு. வி. டி. ஜி. கருணரத்தின இங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

கல்வித் துறையில் சாதாரண பொது மக்கள் 1956-ம் ஆண்டுக்கு முன்புறக் கணிக்கப்பட்டு வந்தனரென்றும், நாட்டில் சாதாரண மக்களுக்கும் அவர்களுடைய உரிமைகளைக் கொடுத்து புதிய அத்யாயத்தையே ஏற்படுத்தியவா காலஞ்சென்ற திரு பண்டார நாயக்காதான் என்றும் திரு. கருணரத்தின கூறினர்.

**மணி வாக்கு**

தங்கள் மனச்சாட்சிக்கு ஏற்பு இராத சட்டங்களுக்குப் பணியத் தாங்கள் கடமைப்பட்டிருக்கவில்லை என்று நம்புவோருக்கு உள்ள ஒரேபரிகாரம் சாத்துவிக எதிர்ப்புத்தான். மற்றவை அழிவுக்கே கொண்டுபோய்விடும்.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tamil Daily. Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு சித்திரை மீ 28 உ (11-5-63)

## ஆறு வாரக் கோடைக் கல்வி
### அமெரிக்காவில் ஒரு அரிய முயற்சி

ஆண்டு முழுதும் படிக்க வேண்டிய பாடத்தை ஆறே வாரங்களில் கற்றுக்கொள்ள வேண்டுமென்றால், எப்படியிருக்கும்? ஆனால், அவ்வாறு பயிலும் அமெரிக்கப் பையன் ஒருவன், பயந்து "செத்தேன்; பரவசமடைகிறேன்" என்கிறான்.

அமெரிக்காவில் நியூ ஹாம்ப்ஷயர் மாநிலத்தில் கான்கார்டு என்ற சிறு நகரின் சுற்றுப்புறத்தில் இயற்கைக் காட்சிகள் விழங்கும் இனிய சூழ்நிலையில் 'செயின்ட் பால்' என்னும் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அதுதான் இப்போது ஐந்து ஆண்டுகளாக மாநிலத்தின் பொறுக்கு மணிகளான மாணவர்களைத் தெரிந்தெடுத்துக் கோடை விடுமுறையில், ஆறு வாரச் சிறப்புப் பயிற்சி அளித்து வருகிறது.

'செயின்ட் பால்' பள்ளிக்கூடம் அமெரிக்காவின் பணக்காரவீட்டுப் பிள்ளைகள் பள்ளி என்று நூறு ஆண்டுகளாகப் பெயரெடுத்து இருந்தது. ஆனால், நூற்றாண்டு விழாக் கொண்டாடியபோது, அதன் தலைவர் ரெவரெண்ட் மாத்யு வாரன் என்பவரும், மற்ற அதிகாரிகளும், மற்றப் பிள்ளைகளுக்கும் உதவும் இந்த உயர் படிப்புத் திட்டத்தை உருவாக்கினார்கள் அதற்கு போர்டு அறநிலையத்தின் லட்சம் டாலர் (ரூபா 4,75,000) மானியம் ஒன்றும் உதவியது.

நியூ ஹாம்ப்ஷயர் மாநிலத்தில் லட்சம் மக்களுக்கு மேல் வாழும் ஒரு பெரிய நகர்கூட இல்லை. மாநிலம் முழுவதிலும் ஏறக்குறைய நூறு சிறிய உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றின் படிப்பு வசதிகளும் குறைவு.

1958-ல் செயின்ட்பால் பள்ளி தனது உயர் படிப்புத் திட்டத்தைத் தொடங்கியபோது, நூறு மாணவர்கள் பயன் பெற்றனர். இவர்கள் மாநிலம் நெடுகிலுமிருந்து அரித்தெடுத்த சிறந்த மாணவர்கள். அவர்கள் படித்த பள்ளிக்கூடங்களில் இல்லாத உயர்தரப் பாடங்களை இந்த ஆறுவாரப் பயிற்சித் திட்டம் கற்றுக்கொடுத்தது.

உயர் படிப்புத் திட்டத்தில் 1962-ம் ஆண்டு கற்றுக் கொடுக்கப்பட்ட பாடங்கள் உயர்தர உயிர்நூல், ரசாயனம், பௌதிகம், தற்கால ஐரோப்பிய வரலாறு, கால்குலஸ், ஜெர்மானிய மொழி, ரஷ்ய மொழியின் பாலபாடமும் உயர் பாடமுமாகும். படிக்கவரும் மாணவர் ஒவ்வொருவரும் தமது முக்கிய பாடத்தைத் தாமே தெரிந்தெடுத்துக் கொள்வர்; அத்துடன், ஆங்கிலம், சொல்வன்மை ஆகிய பாடங்களையும் கற்கவேண்டும்.

வாரத்துக்கு 24 வகுப்புகள்; வகுப்பு நேரம் 50 நிமிடம்; மேற்கொண்டும் தனிப்பட 20 மணி நேரம் படிக்கவேண்டும். கடுமையான உடற்பயிற்சிகளும் உண்டு. இங்கு வரும் மாணவர்கள் இதற்குமுன் இவ்வளவு கஷ்டப்பட்டுப் படித்தது கிடையாது! பரீட்சையில் எப்போதும் முதலாவதாகத் தேறிப் பழக்கப்பட்டவர்கள் இப்போதுதான், தேறுவோமா என்ற பயத்தை அறிந்தவர்களாகின்றார்கள் அதிலும், முதல் வாரந்தான் கவலை மிக்க காலம்.

படிப்பில் மந்தமானவர்களே இல்லாததால், வகுப்பு வேகமாக நடக்கிறது. தெளிவாகப் பேசும் ஆசிரியர், பொறுப்போடு கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் செயின்ட் பால் பள்ளியில் தாம்கண்ட இரண்டு சிறப்புகள் இவை என்கிறாள் ஒரு மாணவி.

அமெரிக்காவில் கிழக்குப் பகுதியிலுள்ள மிகச் சிறந்த கல்லூரிகள் சிலவற்றின் ஆசிரியர்கள் வந்திருந்து இவ்வாறு அக்கறையோடு கற்றுக் கொடுக்கிறார்கள். வகுப்பில் மந்தமான மாணவர்களே இல்லாததால் அவர்களுக்கு எளிதாக இருக்கிறது. இந்த உயர் படிப்புத் திட்டத்தை 'ஆசிரியர்களின் சுவர்க்கம்' என்கிறார் அவர்களில் ஒருவர்.

மாநிலத்தின் பொதுப் பள்ளிகளிலிருந்து தான் மாணவர்கள் பொறுக்கியெடுக்கப் படுகிறார்கள். உயர்நிலைப் பள்ளியில் இரண்டாவது ஆண்டு படிக்கும் மாணவர்கள் இவர்கள். மாநில அரசாங்கத்தின் கல்வி இலாகாவும் நியூ ஹாம்ப்ஷர் பல்கலைக் கழகமும் சேர்ந்து மாணவர்களைப் பொறுக்கி எடுக்கின்றன. செயின்ட் பால் உயர் படிப்புத் திட்டத்தை நடத்தி வைக்கும் டைரக்டர் ஆர். பிலிப் ஹக்னி, மாணவர் ஒவ்வொருவரையும் நேரில் கண்டு தெரிந்தெடுக்கிறார். இந்தப் பேட்டிக்கும் தெரிவுக்கும் அவர் ஐந்து மாதமாக வாரந்தோறும் நான்கு நாட்கள் செலவிடுகிறார்.

மெக்கானிக்குகள், கடைக் குமாஸ்தாக்கள், எழுத்தாளர்கள், பள்ளியாசிரியர்கள் ஆகியோருடைய பிள்ளைகளே இவ்வாறு உயர் படிப்புப் பயிற்சிக்குப் பொறுக்கி யெடுக்கப்படுகிறார்கள். படிப்புத் தகுதியை வைத்துப் பொறுக்கி எடுத்த பிறகுதான், மாணவனால் படிப்புக்குப் பணம் கட்ட முடியுமா என்பதையும்பற்றி எண்ணுகிறார்கள். சிலர் ஆறுவாரப் பயிற்சிக்கும் பள்ளியில் தங்கியிருப்பதற்கும் 25 டாலர்தான் கட்டுகிறார்கள். பணவசதி இல்லாததால் பலர் கல்லூரி சென்று கற்க நினைக்காதவர்கள். ஆனால் 1962-ல் இந்தத் திட்டம் நடக்கும்போது, 39 கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த அதிகாரிகள் இங்கு வந்து இச் சிறந்த மாணவர்களில் யார் யாருக்குத் தங்கள் கல்வி நிலையத்தில் இடம் கொடுக்கலாம் என்று கவனித்தார்கள்.

அதன்பயனாக, முந்திய ஆண்டுகளில் செயின்ட்பால் பள்ளியில் ஆறு வாரக் கோடைப் பயிற்சிபெற்ற மாணவர்களிலும் பலருக்கு உயர்ந்த கல்லூரிகளில் படிக்க நல்ல ஸ்காலர்ஷிப்புகள் கிடைத்துள்ளன வில்லியம் ரைலி ஒரு யந்திரத் தொழிலாளியின் மகன்; 1961ல் செயின்ட்பால் உயர் படிப்புத் திட்டத்தில் சேர்ந்து பௌதிகத்தில் சிறப்புறப் படித்துத் தேறியவன். இன்று பெயர் பெற்ற மாஸச் சூஸட்ஸ் தொழில் நுட்பக் கல்லூரியில் ஹானர்ஸ் வகுப்பில் படிக்கிறான். எழுத்தாளர் ஒருவருடைய இரண்டு பையன்கள் செயின்ட் பால் திட்டத்தில் சிறந்து விளங்கியதால் ஸ்காலர் ஷிப்புகள் பெற்று ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்கள். தாயார் கடை குமாஸ்தாவாகவும், தகப்பனார் நோயினால் படுத்த படுக்கையாகவும் இருக்கும் நிலையில் படிக்கும் மக்கள் காரன் எஸ்டெல், ஆறு வாரக் கோடைப் பயிற்சியில் தலை சிறந்த மாணவியாக விளங்கியதால், சில அல் நிலையங்களிடமிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் அவளுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கிடைத்துள்ளன. அவள் வெல்லஸ்லி கல்லூரியில் படிக்கிறாள். பௌட் வில்லியம்ஸ் ஒரு நீக்ரோ; அவள் தந்தை அமெரிக்க விமானப்படையில் மாஸ்டர் ஸார்ஜன்ட். 1962 வருடத்தில் அவள் ரஷ்யா மொழிப் பயிற்சியில் உயர்ந்து விளங்கியதால் பிரவுன் பல்கலைக் கழகத்தின் பெம்புரோக் கல்லூரியில் சேர்ந்தார்.

ஆறு வாரப் பயிற்சியில் சேர்ந்து படித்து முடித்த மாணவர்கள் கிட்டத்தட்ட 600 பேர்களாவர். அவர்களில் இரண்டு பேர்களைத் தவிர மற்றெல்லாரும் கல்லூரிகளில் சேர்ந்துவிட்டார்கள். அவ்விருவரும் அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்துள்ளனர்; பிற்காலத்தில் பல்கலைக்கழகங்களில் சேரலாம் என்று எண்ணியுள்ளனர்.

## கும்பெனித்தெரு காவல்முகாம்

புதுடில்லி லோகசபையிலே கொழும்பு கும்பெனித்தெரு பொலிஸ் காவற்கூடத்தைப் பற்றி முக்கியமான கேள்வி கேட்கப்பட்டுள்ளது. சட்டவிரோத குடியேற்றக்காரர் என்று சந்தேகிக்கப்படும் பலரைக் கைதுசெய்து அங்கு வைத்து இம்சைசெய்வதாயும், நல்ல உணவு அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்றும், அங்கு அதிகமான மக்கள் நீண்டகாலத்துக்குக் கேள்வி முறையின்றி அடைக்கப்படுவதாகவும் பலபல புகார்கள் எழுந்துள்ளன. விஸா முடிந்து இங்கு வசிப்பவர்களையும்கைது செய்து அங்கு தடுப்புக்காவலில் 16 நாட்களுக்குமேல் வைக்கப்படுவதாயும், மனிதாபிமானத்துக்கு மாறாக நடத்தப்படுவதாயும் சொல்லப்படுகின்றது.

இது பாரதூரமான புகார். இதைப்பற்றி லோகசபையில் ஓர் அங்கத்தவர் கேட்டதற்கு கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷன் இதுபற்றிக் கவனித்து கூடுமான நடவடிக்கை எடுப்பதாக இந்திய வெளிவிவகார உதவி மந்திரி தெரிவித்தார். காவலில் வைக்கப்பட்டவர்கள் இந்தியப் பிரஜைகள் தானா என்பதைக் குறித்து இந்தியாவில் விசாரணை நடத்துவதைத் துரிதப்படுத்துவதாயும், இதன் பயனாக, காவல் முகாமில் அடைபட்டுள்ளவரின் எண்ணிக்கை குறைய உதவியாக இருக்குமென்று தாம் நம்புவதாயும் உதவி மந்திரி பதிலளித்துள்ளார். இது மனிதர்களைப்பற்றிய பிரச்னை. மனிதாபிமானத்துடன் இரு அரசாங்கங்களும் ஒத்துழைத்துத் தீர்க்கவேண்டியதாகும்.

சந்தேகத்தின்மீது இவ்வித பொலிஸ் முகாம்களில் காவலில் வைக்கப்படுபவர்கள், குரூரமாக அடித்து, உதைக்கப்படுவதாக ஒரு பீதி நிலவுகின்றது. இந்தியாவுக்குத் திரும்பிவிடலாமென்று நினைப்பவர்களும், பொலிஸார் அடிப்பார்களோ என்று அஞ்சி, தலைமறைவாக இருந்து நரகாவஸ்தைப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகின்றது. சட்டவிரோதமாக வந்தவர்களாயினும்சரி, அல்லது விஸாகாலம் கடந்து இங்கு வசிப்பவர்களாயினும் சரி, அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாமேயன்றி, அவர்களை அடித்து இம்சை செய்ய பொலிஸுக்கு அதிகாரம் கிடையாது. அடிப்பது பற்றிய புகார் உண்மையாயின், அது அத்துமீறிய பாரதூரமான செயலாகும். இதனால், தாங்களாக வெளியேற விரும்புபவர்களும், பயந்து வெளியேற விரும்புபவர்களும், பயந்துகொண்டு இங்கேயே இருக்கநேரிடுகிறது.

இது தவிர, அக்காவல் முகாம்களிலே, கொடுக்கப்படும் உணவு சிறைச்சாலைக் கைதிகளுக்குள்ள உணவைவிட மோசமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அங்கு ஒவ்வொருநாளும் நரகவேதனை அனுபவித்துக்கொண்டு இருப்பவர்கள் நிலை எப்படி இருக்குமென்பதைச் சுலபமாக ஊகிக்கலாம். உலகில் எங்குமே இல்லாதபடி விஸா சட்டதிட்டங்களைக் கடுமையாக்கி, இரு அண்டைநாடுகளுக்கு மிடையே மக்கள் தாராளமாகப் பிரயாணம் செய்யமுடியாதபடி, இரு அரசாங்கங்களும் தடுத்துள்ளன. இதனால் பல குடும்பங்கள் பிரிந்தும், பல குழந்தைகளின் கல்வி சீர்குலைந்தும் போவதுடன் கள்ளத்தனங்கள் அதிகரிக்கவும் செய்துள்ளன. சட்டவிரோதமாக நடப்பவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். ஆனால் இந்த நடவடிக்கை மனிதாபிமானத்துடன், கருணையுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

இரு அரசாங்கங்களும் பரஸ்பரம் ஒத்துழைப்பதுடன், காவல்முகாம்கள் இரு அரசாங்கப் பிரதிநிதிகளின் கூட்டு நிர்வாகத்தில் நடப்பதாயின், துரதிருஷ்டம்வாய்ந்த அந்த எளிய மக்களின் சங்கடம் குறையக்கூடும். காவல்முகாமில் இம்மக்களின் எண்ணிக்கை குறைவதுநல்லதே. ஆனால் எண்ணிக்கை குறைவதுடன் அம்மக்கள் பல இம்சைகளுக்கும் உள்ளாகாமல், மனிதாபிமானத்துடன் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம். அண்டைநாட்டு மக்களிடையே நெருங்கிய உறவுகள் இருப்பது இயற்கை. கேவலம் கடும் சட்டதிட்டங்களால் இதைத் தடுத்து நிறுத்திவிடுவதென்பது முடியாது. மனிதநீதிக்கு மாறாக எடுக்கும் கொடும் நடவடிக்கை, இருதேச நல்லுறவையும் கெடுப்பதைத் தவிர இதனால் எவ்வித நல்ல பலனும் ஏற்படுவதற்கில்லை. இவ்விஷயத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு நல்ல மனமாற்றம் ஏற்பட்டாலே, இப்பிரச்னை தீர வழிபிறக்கும்.

## மாணவன் மீது வழக்கு

மாவிட்டபுரம், வெள்ளி

சென்றமாதம் 30-ம் திகதி காலை 9-30 மணியளவில் காங்கேசன்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை தீப் பற்றி 200 ரூபா நஷ்டம் ஏற்பட்டதைத் தொடர்ந்து புலன் விசாரணைசெய்த காங்கேசன் துறை பொலிஸ் சார்ஜண்ட் தம்பிப்பிள்ளை அதே பாடசாலையைச் சேர்ந்த ஆயத்த சிரேஷ்டவகுப்புமாணவன் ஆறுமுகம் பாலச்சந்திரனைகைதுசெய்துமல்லாகம்நீதிபதிமுன்னிலையில் ஆஜர்செய்தார். நீதிபதி மாணவனை 100 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மேல் விசாரணையை 17-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## ஐயாறன் எழுதுவது

இருபது வயதுள்ள ஒரு சிங்கள வாலிபர் கஷ்டப்பட்டு உழைத்து ரூ. 250 வரை சேமித்து வைத்திருந்தாராம். சென்ற சிங்கள புது வருடப்பிறப்பன்று சூதாட்டம் ஆடி அவ்வளவு பணத்தையும் தோற்று மனமுடைந்து, விஷமருந்தி சென்ற புதன் கிழமை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் மாண்டதாக ஒரு பரிதாபச்செய்தி கூறுகிறது.

தமக்கு இந்த கதிநேருமென்று அவருக்குச் சிறிதாகிலும் தெரிந்திருந்தால்,சூதாடுமிடத்துக்குப் பக்கத்திலும் அவர் சென்றிருக்கமாட்டார். அனுபவமில்லாத இளம்வயது. அதிக பணத்தை சுலபமாகத் தட்டிவிடலாமென்று தவறான ஆசைகொண்டு சூதாடி, இருந்த பணத்தையும் இழந்து, தன் உயிரையும் இழந்துவிட்டார்.

குடி, சூதாட்டம் இவை கூடாதென்று பல மதங்களும் தடுக்கின்றன. ஏன்? வாழ்க்கையைக் குட்டிச்சுவராக்கிவிடுமென்ற காரணத்தால்தான். இப் பழக்கங்களால் பிறருக்குத் தீங்கு இல்லை. அதனால் பாவமில்லை. ஆனால் தனக்குத்தானே ஒருவர் பெரும் தீங்குசெய்துகொள்பவராவார். அதனால்தான் ஆபத்து. சூதாடிய அவ்வாலிபரின் பரிதாப முடிவு, மற்றவர்களுக்கும் பெரிய எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

* * *

ஆஸ்பத்திரி ஸ்விப்பிலே 7 வருடங்களுக்குமுன் முதல் பரிசு 71 ஆயிரம் ரூபாய் பெற்ற ஒரு சிங்கள தோட்டத் தொழிலாளி, எல்லாப் பணத்தையும் இழந்து தற்கொலைசெய்துகொண்டதாக எழுதி இருந்தேனல்லவா? அவருக்கு 6 பிள்ளைகளாம். அவர் பரிசு விழுந்ததும், தோட்டவேலையைவிட்டு, 14 ஏக்கர் நிலம் வாங்கினார். இரண்டுவீடுகள் கட்டினார். இரு கார்கள்வாங்கி வாடகைக்கு விட்டாராம்.

சிலகாள் சுகமாக வாழ்ந்தார். பின்னர் கொழும்புக்கு அடிக்கடிசென்று இரவு கிளப்புகளில் உல்லாசமாகப் பொழுது போக்கினாராம்.பிடித்தது சனியன். பணம் கரைந்தது. வருமானவரி 18 ஆயிரம் கட்டமுடியாமல், விஷமருந்தி அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார். திடீரென பணக்காரராகிறவர்களில் சிலர் வாழத்தெரியாமல், இப்படி ஊதாரித்தனமாக டம்பாச்சாரிகளாக வாழ்ந்து, அருமை உயிரையும் இழப்பதாகவும், அவர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கவேண்டுமென்றும் விசாரணை அதிகாரியும் எச்சரித்துள்ளார். ஆனால் மனம் சற்றே தளரும்போது, இந்த எச்சரிக்கையெல்லாம் ஞாபகமிருக்குமா?

* * *

"நியாயமான தமிழ் உபயோகமென்பதைப் பற்றிப் பேசாதீர்கள். அது செத்துப்போய் நீண்டகாலமாயிற்று" என்று கொழும்பைச் சேர்ந்த ஓர் தமிழன்பர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். கம்பகாவிலேஅவர்ஒருதபாலாபீஸ் சேமிப்பு வங்கியில் சேர்ந்திருந்தாராம். சேமிப்புப் புத்தகத்திலே சிங்களத்தில் எழுதியிருந்தனர். தீவின் பல பகுதிகளிலும் பணம் போடவும் எடுக்கவும் வேண்டியிருந்

(5-ம் பக்கம் பார்க்க)

# "பேச்சுவழக்கு இலக்கியம் முடிவில் தமிழை கிளைமொழியாக்கிவிடும்"

## கணேசையர் நினைவுதினத்தில் கலாநிதிசதாசிவம் கருத்து

மாவிட்டபுரம், வெள்ளி

"தேசிய இலக்கியம் என்ற சொற்றொடர் ஈழத்து எழுத்தாளர் சிலரிடையே இன்று அடிபடுகின்றது. இச்சொற்றொடரின் பொருள் எனக்கு விளங்கவேயில்லை. ஈழத்துச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டே ஈழத்து இலக்கியங்கள் எழுதப்படவேண்டும் என்பதில் கருத்துவேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. எழுத்தாளன் தனது சூழலில் இருந்தே தான் கூறும் உரிப்பொருளுக்கேற்ற முதலையும் கருவையும் பெறுகிறன். இதனைப்புலவர்களுக்கு யாரும் கற்பிக்கவேண்டியதில்லை. ஈழத்து மக்களின் பேச்சுத் தமிழிலும், குறிஞ்சித்தமிழிலும் எழுதப்படும் இலக்கியங்கள் தேசிய இலக்கியங்கள் என்ற கருத்தை எமது இளைஞர்கள் சிலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய கருத்தின் படி ஈழத்துச் சூழ்நிலையையும், ஈழத்து மக்களின் வாழ்க்கை முறையையும் செந்தமிழில் கூறுவதே தேசிய இலக்கியம்."

வித்துவ சிரோமணி பிரமஸ்ரீ கணேசையர் ஞாபக விழா நேற்றுக் கட்டுவன் பாலர் ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற போது சொற்பொழிவாற்றிய கலாநிதி ஆ. சதாசிவம் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

செந்தமிழ் என்பது ஈழம், இந்தியா, மலாயா முதலிய தமிழ் கூறும் நல்லுலகத்தின் மொழி. பேச்சு வழக்கு நாட்டுக்குநாடு ஊருக்கு ஊர்வேறுபட்டுக் கொண்டே போகிறது. பேச்சு வழக்கு இலக்கியத்தை எழுதினல் அது குறுகிய காலத்தில் இறந்துவிடும். இதனலேயே சங்கப்புலவர்கள் இடத்துக்கிடம் மாறாததாகிய வழக்கை செந்தமிழ் வழக்கு எனக் கொண்டார்கள். செந்தமிழ் என்பது தனித்தமிழ் அன்று. உலகம் ஒன்ருக இயங்கிக் கொண்டு இருககும் சூழ்நிலையில் பிறமொழிச் சொற்களின் கலப்பு அவசியம். இச்சொற்கள் தமிழ் மரபுக்கு ஏற்ப இலக்கியத்தில் நுழைய வேண்டும்.

பதிற்றுப்பத்தும், சிலப்பதிகாரமும் எழுந்த சேரநாட்டினர் ஒரு காலத்தில் செந்தமிழைப் புறக்கணித்து கொச்சைத்தமிழைப் போற்றி இலக்கியங்கள் செய்ததனல் அவர்கள் நாட்டுமொழி மலையாளமாக மாறிற்று. தமிழ் கூறும் நல்லுகமும் சுருங்கிற்று. இதே சூழ்நிலை ஈழத்தமிழ் வளர்ச்சிக்குப் பொருந்தும். இந்திய நூல்களை இங்கு வரவழைகக்கூடாது என்று கங்கணம் கட்டி நிற்கும் எமது முற்போக்கு இளைஞர்கள் ஈழத்துக்கிராமியச் சொற்களுக்கு வாழ்வு கொடுப்பதோடு தமிழ் நாட்டோடு எமக்கு உள்ள தொடர்பும் அறுவதற்கும் காரணர் ஆகின்றனர். இந்நிலை உருப்பெறுமாயின் காலகதியில் எமது ஈழத் தமிழ்மொழி சிங்களத்தின் கிளைமொழியாக மாறி விடும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆக்கஇலக்கியம் என்ற கோதாவில் ஈழத்தமிழை வேற்று மொழியாக்குவதை தமிழ் மொழியின் பாதுகாவலர்களான பண்டித, வித்துவான்கள் பொறுக்கமாட்டார்கள்.

தமிழ் மக்களின் பொக்கிஷமான இலக்கியங்கள் அனைத்தும் கடவுள் கொள்கையை ஆதாரமாக வைத்தே எழுதப்பட்டன. கம்பனின் திருமாலும், சுப்பிரமணிய பாரதியின் சத்தியும் இதற்கு எடுத்துக்காட்டுக்கள். தமிழ் இலக்கியங்களைப் படியாதவர்கள் சிருஷ்டி இலக்கிய கார்த்தாக்களாக முன் வந்தமையினலேயே சமூக சீர்திருத்தம் என்ற கோதாவில் 'நாஸ்திக கொள்கைகள் இலக்கியத்துக்குள் புகலாயின. இந்தச் சூழ்நிலை உடனடியாக மாற்றப்படவேண்டும்."

திரு. கா. சிவத்தம்பி பேசுகையில் கூறியதாவது:-

"தேசிய இலக்கியம் ஒரு நாட்டிலே ஒரு காலகட்டத்தில் வாழ்ந்த மக்களுக்காக மக்கள் மொழியில் எழுதப்படுவது. தேசிய இலக்கியங்கள் கடந்த 200 ஆண்டுகளில் உலகின் பல பாகங்களில் தோன்றியுள்ளன. ரவீந்திரநாத் தாகூர், பாரதி ஆகியோர்கள் காலத்தில் இந்தியாவில் தோன்றிய இலக்கியம் தேசிய இலக்கியம் எனப்பட்டது. 1876 தொடக்கம், 1914 வரை ஹங்கேரியில் தோன்றிய இலக்கியத்தை தேசிய இலக்கியம் என்றனர். தேசத்து மக்களுக்கு விளங்கக்கூடிய பண்புடன் இலக்கியம் எழுதப்படவேண்டும். நாங்கள் இலங்கையர்கள் என்ற நம்பிக்கையை உண்டாக்கவேண்டும். எல்லோரும் மனிதர்கள் தான். ஆனல் ஒரு சில கட்டத்தில் மனிதன என்ற என்ற கேள்வி பிறக்கிறது. நாவலர் செய்யாததை நாம் செய்யவில்லை.

மரபைப் பேணுகிறோம் இல்லை, இலக்கணத்தை வழுவவிடுகிறோம் என்று எம்மீது குறைசாற்றுகிறார்கள். ஈழத்துச் சிறுகதை இலக்கயத்தின் வளர்ச்சி பத்து ஆண்டுகள் தான் ஆகின்றன. இக்கட்டத்தில் பிழைகள் நேர்வதும் சகஜம். பேசுகின்ற வழக்கிலிருந்து தோன்றுவதை செம்மைப்படுத்தவேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

### தமிழ் கொலை செய்யப்படுகிறது

வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா பேசுகையில் கூறியதாவது:-

கணேசையா அவர்கள் தமிழ் மரபைப் பாதுகாக்கவே இலக்கணம் எழுதுகிருர். அவரைப் பற்றிய இந்த நினைவு விழாவில் அவர் காட்டிய மரபுவழியைப் பின்பற்றுகிறோமா என்பதைச் சிந்திக்கவேண்டும். இன்று ஈழத்தில் தமிழ்மொழி உருக்குலைந்து கொலை செய்யப்பட்டு வருகிறது. நூல் எழுதத் தகுதியற்றவர்கள் நூல் எழுத முற்பட்டமையின் விளைவே இது. இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் கிராமியச் சொற்கள் நிறைந்துவிட்டன. நூல்களை எழுதுவோருக்கு கிராமிய சொற்களைத் தவிர வேறென்றும் தெரியா. இலக்கியத்தில் இலக்கண வழுக்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதன் காரணம் என்னவெனில் இலக்கியம் எழுதுபவர்கள் நன்னூலைத்தானும் படித்தறியார். தொல்காப்பியத்தைக் கண்டறியார். இந்தச் சூழ்நிலை மாற்றப்பட்டுவருவது வரவேற்கக்கூடியது. கணேசையாவுக்கு நாங்கள் அமைக்கும் ஞாபகச் சின்னம் அவர் போற்றிப் பாதுகாத்துவந்த இலக்கண மரபை எழுத்தாளர்கள் எல்லோரும் விளங்கிக்கொள்வதற்கு ஏற்ற வழியை அமைப்பதேயாகும்.

திரு. கி. லக்ஷ்மணன் பேசுகையில் கூறியதாவது:-

"கணேசையா நல்ல உரை ஆசிரியர். அவர் நல்ல இலக்கண ஆசிரியர். அவருடைய இலக்கணக் குறிப்புக்கள் இன்றேல் தொல்காப்பிய உரைகளை விளங்கிக்கொள்ள முடியாது. கம்பனுக்கு ஒரு சடையப்பவள்ளல் கிடைத்தது போன்று கணேசையருக்கு ஈழகேசரிப் பொன்னையா அவர்கள் கிடைத்தார்கள். ஈழமும் இந்தியாவும் பெருமைப்படத்தக்கவகையில் தொல்காப்பியத்தின் மூன்று பாகங்களுக்கும் உரைகளைச் சிறந்த முறையில் அச்சிட உதவிய பொன்னையா அவர்கள் இன்றேல் கணேசையாவின் கருத்துக்களை வெளியுலகம் அறிந்திருக்க முடியாது."

கூட்டத்திற்கு பண்டிதர் இ. த. நமசிவாயம் தலைமைவகித்துப் பேசுகையில் பல்வேறு பட்டகருத்தினர்கள் இவ்விழாவில் பங்குபற்றுவதன் மூலம் வேற்றுமையில் ஒற்றுமை காண முடிகிறதென்று கூறினர். "கணேசையா எனும் பொருள் பற்றி கவிதை அரங்கம் ஒன்று நடைபெற்றது. இக்கவிதை அரங்கத்தில் திருவாளர்கள் சில்லையூர் செல்வராசன், க.பே. முத்தையா, இ. அம்பிகைபாகன், செ. கதிரேசம்பிள்ளை, இ. நாகராஜன், ச. வே. பஞ்சாட்சரம், சொக்கன், அல்வாயூர் மு. செல்லையா ஆகியோர் பங்குபற்றினர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ததால், தமிழ், ஆங்கிலம் இவ்விரண்டிலும்கூட அவர் அப்புத்தகத்தில் விவரங்களை உரிய இடங்களில் குறிப்பிட்டிருந்தார். ஆனல் வட்டியைப் பதிவதற்காக அப்புத்தகத்தை அனுப்பிவைத்திருந்தும், தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் குறிப்பிட்டிருந்ததை ஒரு குமாஸ்தா அழித்து, அதில்தன் கையெழுத்துமிட்டிருந்தாராம். யாருடைய யோசனைமீது அந்தக் குமாஸ்தா இவ்வித நடவடிக்கை எடுத்தாரோ தெரியவில்லை. அல்லது அவரே யாரையும் கேட்காமல் எடுத்திருக்கவும்கூடும்.

இது எப்படியாயினும், சேவிங்ஸ் வங்கி ஒரு வர்த்தக ஸ்தாபனம் போன்றது. சிங்களம் தெரியாதவரும் பணம் சேமிக்க பிரசாரம் செய்யப்படுகின்றது. அப்படி இருக்க, தனிச் சிங்களத்தை அமுலுக்குக் கொணர்ந்து, தமிழ், ஆங்கிலக்குறிப்புகளை வெட்டிவிடுவது, அந்த வங்கித் தொழிலுக்கே பாதகமாவதுடன், சிங்களம் தெரியாதவர்களின் அபிமானத்தையும் இழக்க நேரிடும். மொழி வெறி எவ்வளவு விபரீதங்களெல்லாம் செய்கின்றது!

* * *

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே.

— திருநாவுக்கரசர்

## மாணவர்களுக்கு கட்டண சலுகை

கொழும்பு, வெள்ளி

கிறிஸ்துவ பிள்ளைகளுக்கு தங்கள் சமயப் பாடசாலைகளில் மட்டும் கட்டணமில்லாது கல்விகற்கலாம் என்றிருந்த சட்டம் மாற்றப்பட்டு, மற்றைய தனிப்பட்ட கிறிஸ்தவ பாடசாலைகளிலும், கிறிஸ்தவ மதத்தில் வெவ்வெறு பிரிவினரான பிள்ளைகள் எல்லோரும் கட்டணமில்லாது கல்வி கற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றமதத்தை சேர்ந்த பிள்ளைகள் தொடர்ந்து கட்டணமில்லாது அவர்களது சமயப் பாடசாலைகளிலேயே கல்வி கற்கலாம்.

கல்வி அதிகாரி திரு. எஸ். எப். டி. சில்வாவினல் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை உதவி அதிகாரிகளுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது தனிப்பட்ட. பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பதில் ஏற்படும் காலதாமதத்தை நீக்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகிறது.

விண்ணப்பங்களை கவனமாகப் பார்வையிட்டபின் நேர்முகமாக கைச்சாத்திடப்பட்டு, தலைமை கந்தோருக்கு ஒவ்வொரு விண்ணப்பங்களிலும் அவர்களது குறிப்பையும் எழுதி அனுப்பும்படி மாகாண உத்தியோகத்தர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## சுயபாஷையில் போதனை

கொழும்பு, வெள்ளி

பாடசாலைகளில் சுயபாஷையில் விஞ்ஞான பாடங்களை ஜி. சி. ஈ. வகுப்புவரையும் போதிப்பதிலுள்ள பலாபலன் வரவேற்கக் கூடியதாக விருக்கிறது என்று அரசாங்க பாடசாலைகளின் பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கத்தின் காரியதரிசி திரு. சி. விதான கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பலாலியில் அல்லது மகாரகமவில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்களின் சிறந்த சாதனை அறிக்கையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட தராதர பாடபோதனையில் ஏதாவது மாற்றம் ஏற்படுமானல், நாட்டின் மொழிக் கொள்கைக்கு மாறுபட்டதாக இருப்பது மட்டுமன்றி சுயபாஷை மூலம் கல்வி பயின்று வந்த மாணவர்களுக்கு அதிருப்தியுண்டாக்குவதோடு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் சுயபாஷையில் விஞ்ஞானம் போதிக்க கற்றிருப்பதன் காரணமாக, பொது மக்களின் பணம் விரயமாகிவிடும் என அறிக்கை குறிப்பிடுகிறது.

சில பாடசாலைகளில் சுயபாஷையில் பயிற்சியளிக்கப்படாத பட்டதாரிகளை நியமிக்கிருர்களேயன்றி சுயபாஷையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை உயர்தர வகுப்புகளுக்கு போதிக்க தகுதியில்லையெனக் கருதி நியமிக்காமலிருக்கின்றுர்கள் என அறிக்கை கூறுகின்றது.

## உப்புத் தட்டுப்பாடு

அம்பாந்தோட்டை, வெள்ளி

இலங்கையிலேயே பெருமளவில் உப்பு உற்பத்தி செய்யப்படும் பகுதியாகிய அம்பாந்தோட்டையில் வியாபாரிகளுக்கு உப்பு அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வர்த்தகர்களுக்கும் மாதமொன்றிற்கு 6 தொன் உப்பே விநியோகிக்கப்படுகின்றது. மழை பெய்ததின் காரணமாக பருவகால உப்பு விளைச்சல் நடைபெறவில்லை. இதனலேயே பெருமளவில் உபபுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

## புதிய திட்டங்களை விரைவில் அமுலாக்குக

கொழும்பு, வெள்ளி

தனிப்பட்ட முறையில் வைத்திய தொழில் ஆலோசனை வைத்தியத் தொழில் ஆகிய திட்டங்களை விரைவில் அமுலாக்கும்படி அரசினர் வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. இத்திட்டங்களை அமுலாக்கும் திகதி அறிவிக்கப்படாததால் சங்க வருடாந்த கூட்டத்தை நடத்த முடியவில்லை என்றும் சுகாதார அமைச்சிடம் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்புதிய திட்டங்களின் படி சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள் தனிப்பட்ட முறையிலான தொழிலையும், வைத்திய நிபுணர்கள் ஆலோசனைத் தொழிலையும் வேலை நேரங்களைத் தவிர்த்த நேரங்களில் நடத்தலாம்.

## கைத்தொழில் பொருட்காட்சி சுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் பொருட்காட்சி சுவீப் இல. 11-ன்முடிவுகள் பின்வருமாறு:-

முதலாவது பரிசு
08 H 0809 ரூபா 21,500

இரண்டாவது பரிசு
07 U 0741 ரூபா 10,750

மூன்றாவது பரிசு
01 R 0552 ரூபா 5,375

நான்காவது பரிசு
11 D 0338 ரூபா 2,675

ஐந்தாவது பரிசு
09 W 0241 ரூபா 1,331

ரூபா 500 கொண்ட ஐம்பது சாதாரண பரிசுகளின் இலக்கங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 04 M 0856 | 13 B 0692 |
| 14 A 0984 | 07 U 0801 |
| 13 F 0515 | 09 K 0019 |
| 14 Z 0364 | 12 T 0902 |
| 10 X 0506 | 03 H 0398 |
| 12 N 0185 | 04 R 0002 |
| 02 S 0864 | 05 J 0346 |
| 05 L 0036 | 01 P 0659 |
| 05 Y 0785 | 10 H 0271 |
| 01 I 0210 | 03 Y 0924 |
| 14 J 0892 | 02 K 0804 |
| 07 K 0074 | 05 V 0849 |
| 11 B 0723 | 10 M 0748 |
| 13 Y 0499 | 07 K 0486 |
| 09 X 0128 | 11 A 0375 |
| 11 Z 0607 | 11 T 0168 |
| 12 C 0872 | 10 J 0195 |
| 11 K 0064 | 13 R 0038 |
| 12 S 0037 | 14 F 0654 |
| 11 R 6972 | 03 P 0729 |
| 09 A 0930 | 04 A 0237 |
| 03 Q 0825 | 12 J 0090 |
| 02 V 0295 | 05 B 0296 |
| 05 A 0346 | 05 A 0252 |
| 11 I 0386 | 08 Q 0379 |

ரூபா 300 கொண்ட ஐம்பது சாதாரண பரிசுகளின் இலக்கங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 10 I 0261 | 04 T 0607 |
| 06 U 0405 | 10 L 0382 |
| 07 S 0347 | 07 G 0292 |
| 01 F 0885 | 15 E 0350 |
| 11 M 0307 | 11 F 0501 |
| 03 B 0066 | 15 I 0755 |
| 14 I 0156 | 13 Z 0430 |
| 09 B 0973 | 12 Y 0270 |
| 10 G 0997 | 13 Q 0023 |
| 10 B 0443 | 02 R 0440 |
| 13 U 0066 | 02 B 0819 |
| 01 G 0811 | 03 T 0373 |
| 14 N 0410 | 09 F 0198 |
| 15 N 0077 | 03 Q 0351 |
| 10 X 0123 | 14 F 0318 |
| 02 B 0608 | 09 Z 0073 |
| 14 I 0190 | 08 K 0360 |
| 13 V 0886 | 09 L 0212 |
| 03 L 0236 | 06 Y 0775 |
| 07 M 0961 | 10 M 0157 |
| 10 H 0413 | 13 P 0997 |
| 10 Q 0442 | 13 A 0003 |
| 06 H 0775 | 04 S 0247 |
| 04 F 0605 | 13 J 0582 |
| 14 K 0686 | 05 Q 0548 |

## தொழிலாளர் நலன் கருதவில்லை மந்திரி மீது குற்றச்சாட்டு

கொழும்பு, வெள்ளி

ஓய்வு பெறுவதற்கான வயது வந்த தொழிலாளர்கள் ஓய்வுபறும் காலத்திற்கான உபகாரச் சம்பளம் அளிக்கப்படவேண்டும் எனக் கோரிச் செய்துகொண்ட விண்ணப்பங்களை தொழில் மந்திரி கவனிக்கவில்லை என்று தேசிய தொழிலாளர் காங்கிரஸ் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளது. தொழிலாளர்கள் எதுவும் செய்யக்கூடிய சுகதேகிகளாக இருக்கும் போது அவர்களிடம் வேலை வாங்கிவிட்டு பின்னர் அவர்கள் ஒன்றும் செய்யமுடியாத நிலையிலிருக்கும்போது அவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு எதுவும் உதவாமல் விடுவது அவர்களை அனாதைகளாக்குவதாகும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

# "பாரதத்தை எதிர்நோக்கும் பெரும் அபாயம் சீனத்தாக்குதலே"

## அகமதாபாத்தில் பிரதமர் நேரு

அகமதாபாத், மே 10

"சீனத் தாக்குதல்தற்போது தோன்றியுள்ள இக்கட்டான நிலையை, பாரத இளைஞர்கள் தீரத்துடனும் நம்பிக்கையுடனும் சமாளிக்கவேண்டும்" என்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பிரதமர்நேரு தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் மூன்று நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு பாரதப் பிரதமர் நேரு நேற்று புதுடில்லியிலிருந்து பிரயாணமானார். அகமதாபாத்தை பிரதமர் நேரு வந்தடைந்தபொழுது அவரை சுமார் பத்தாயிரம் மக்கள் வரவேற்றனர். அகமதாபாத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசுகையில்தான் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் நேரு தொடர்ந்து பேசியதாவது: "சீனத் தாக்குதலினால் பாரதத்தில் இக்கட்டான நிலை தோன்றியுள்ளது. இதனைச் சமாளிக்க பாரத இளைஞர்கள் முன்வரவேண்டும்.

பாரத நாட்டை எதிர்நோக்கியிருக்கும் பெரும் அபாயம் சீனத் தாக்குதல்தான்.

சீனத் தாக்குதலை, நாம் துப்பாக்கியால் மட்டும் சமாளிக்க முடியாது. எம்மிடையே மன உறுதிவேண்டும். பாரதத்தின் பொருளாதாரத்தை தடை செய்ய முயற்சிக்கும் சீனாவின் ஆசைக்கு நாம் பலியாகக் கூடாது. பொருளாதாரத்தை விருத்திசெய்வதில் நாம் எம்மாலான முயற்சிகள் அனைத்தையும் கையாளவேண்டும். பாரதம் சுதந்திரமடைந்த போதிலும் சுதந்திரமடைந்த பிறகு பாரதம் வெகுவாக முன்னேற வில்லையென்றுதான் சொல்வேன்.

பாரதத்தின் பொருளாதாரத்தை விருத்திசெய்வதன் மூலம் சீனத் தாக்குதலை நாம் முறியடிக்கவேண்டும். சீனச் சவால், எமது பொருளாதாரத்தை விருத்திசெய்ய நல்லதொரு வாய்ப்பளித்திருக்கிறது. பொருளாதாரத்தை நாம் விருத்திசெய்யாவிட்டில், சீனத் தாக்குதலால் எமது நாடு அழிந்துவிடும் என்பதை நான் எச்சரிக்கை செய்கின்றேன். ஆகையினால் எதிர்காலத்தை உணர்ந்து எமது நாட்டைக் காப்பாற்றுவதில் மக்கள் எல்லோரும், முக்கியமாக இளைஞர்கள் எந்தவிதமான இன, மத பாகுபாடின்றி கூட்டுறவு முறையில் ஒத்துழைக்கவேண்டும்."

## உத்தரவாத விலைத்திட்டத்தில் மோசடி

### பயிற்சிக் குழு வேண்டுமென கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

உத்தரவாத விலைத்திட்டத்தில் ஏற்பட்டிருக்கும், மோசடிகளையும், வீண் செலவுகளையும் கட்டுப்படுதத ஒரு பயிற்சிக் குழு ஏற்படுத்த வேண்டுமென்று விவசாயசேவைப் பகுதியினர் அரசாங்கத்தை கேட்டுள்ளார்கள்.

இந்தக்குழு, நாட்டின் எப்பகுதிக்கும், குறைந்த கால அறிவிததலின்பேரில் சென்று அங்குள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இலாகாவின் கவனத்திற்கு கொண்டுவர முயற்சி செய்யும்.

பாராளுமன்ற அங்கத்தவர்களாலும், விவசாயிகளாலும், நேரத்திற்கு நேரம் கூறப்பட்டு வந்த முறைப்பாடுகள் விவசாயிகளுககு அதிருப்தி ஏற்படும் வகை சில கொள்வனவு நிலையங்கள் நடந்து வருகிறது. ஒரே அளவு நெல் பல தடவை கொண்டுவரப்படுகிறது. கணக்குகளில் தவறு காணப்படுகிறது விவசாயிகளுக்கு குறைந்த அளவில் பணம கொடுபடுகிறது.

பயிற்சிக்குழு வேளாண்மை சேவைப் பகுதி கமிஷனர் திரு. ஜே. வி. பொன்சேகாவின் கீழ் நேரடியாக பணியாற்ற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "இந்திய போர்க்கைதிகளை சீன தெருக்களில் நடத்திச்சென்றனர்"

## பீக்கிங் அரசாங்கத்தின் மீது திரு. சாவன் கண்டனம்

புதுடில்லி, மே 10

இந்திய போர்க் கைதிகள் சீன வீதிகளில் நடத்தி அழைத்துச் செல்லப்பட்டதாகவும், அவர்கள் விடுதலையாவதற்கு சில வாரங்கள் முன்பே நல்ல உணவை பீக்கிங் அரசாங்கம் அவர்களுக்கு அளித்ததாகவும் பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ ஒய். பி. சாவன் லோகசபையில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்ட ராணுவ அதிகாரிகள், ஜவான்கள் ஆகியோரின் வைத்திய பரிசோதனை இன்னமும் நீடிக்கிறது. பரிசோதனைக்குப் பின் சில அதிகாரிகளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டியுள்ளது. ஆனல் பொதுவாக பரிவர்த்தனை செய்யப்பட்ட இந்திய போர்க் கைதிகளின் ஆரோக்கிய நிலை சுமாராக உள்ளது என்று மந்திரி மேலும் கூறினார்.

கேள்வி ஒன்றுககு சாவன் பதிலளிக்கையில்; போர்க் கைதிகளைத் தெரு வழியே நடத்தி அழைத்துச் செல்வது சர்வதேச சம்பிரதாயத்துக்கு முரணனது என்றும் இதனை சீன அரசாங்கம் கவனத்துக்கு இந்தியா கொண்டுவந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மற்றொரு கேள்விக்குப் பாதுகாப்பு மந்திரி பதிலளிக்கையில் பிரிகேடியர் தால்வியும், மற்றும் 26 ராணுவ அதிகாரிகளும் குன்மிங் என்னுமிடத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினல் மேற்கொள்ளப்பட்டதை ஊர்ஜிதம் செய்தார்.

பரிவர்த்தனை செய்யப்படும் கைதிகளுக்குத் தகுந்த வரவேற்பு அளிக்கப்படவில்லை என்ற புகாரை ஸ்ரீ சாவன் மறுத்தார். அவர்மளுக்கு இராணுவமே தகுந்த வரவேற்பு அளித்துள்ளது என்ருர்.

"ராணுவ அதிகாரிகள் சமீபத்தில் வந்திருக்கிருர்கள். வைத்திய பரிசோதனை நடைபெறுகிறது; அவர்கள் விசாரிக்கப்படுவர். யாருக்காவது சித்தாந்த போதனை செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவந்தால், மாற்று நடவடிக்கை எடுக்கப்படும்" என்று ஸ்ரீ சாவன் பதிலளித்தார்.

போர்க் கைதிகளை ஹாங்காங்குக்கு அனுப்ப ஆரம்பத்தில் சீன விரும்பியதாகவும், ஆனல் ஆட்சேபத்தை சீன ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டு, இந்திய செஞ்சிலுவை சங்கத்திடம் கைதிகளை ஒப்படைக்க சம்மதித்ததாகவும் மந்திரி தெரிவித்தார். இந்திய போர்க் கைதிகளில் சிலர் இந்தியாவுக்கு விரோதமாகவும், சீனவுக்கு ஆதரவாகவும் பிரசாரம் செய்ய பயன்படுத்தப்பட்டது உண்மையா என்று ஸ்ரீ எச். வி. காமத் கேட்டார்.

பிரஸ்தாப 26 கைதிகளும் சீன முழுவதிலும் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தோன்றுவதாகவும், அவர்களுக்கு கம்யூனிஸ்டு சித்தாந்த போதனை செய்வது நோக்கமாக இருக்கலாம் என்றும் ஸ்ரீ சாவன் பதிலளித்தார்.

திரும்பியுள்ள ராணுவ அதிகாரிகளுக்கும், ஜவான்களுக்கும் தகுந்த வைத்திய வசதி கிடைக்க கவனம் செலுத்தாபடுகிறது என்று ஸ்ரீ நாத்பப்யிடம் மந்திரி உறுதி கூறினர்.

சீனர் வசமுள்ள 2311 இந்திய கைதிகளில் இதுவரை 1364 பேர் மட்டுமே ஒபபடைக்கப்பட்டுள்ளனர் எனருர்.

# பெயர்பெற்ற பேய்க்கும் அழகிய பெண்ணுக்கும் திருமணம்!

## மங்கள வாத்தியங்கள் முழங்க மணப்பந்தலில் நடைபெற்றது!!

ரங்கூன், மே 10

பர்மாவில் மியாஞங் நகரையடுத்த நலிந்தா என்னும்கிராமத்தில் மாஷ்வேலோன் எனப் பெயர் கொண்ட 18 வயதுப் பெண்ணுக்குத் தடபுடலாகத் திருமணம் நடந்தது வாத்திய இசை கனஜோராக முழங்கியது. மணப்பந்தல் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. திருமணத்துக்கு வந்திருந்த நூற்றுக்குமதிகமானோர் மணப்பந்தலைச் சுற்றி உட்கார்ந்திருந்தனர். ஆனல் மணமேடையில் மணப்பெண்ணுக்கு அருகில் மணமகன் இல்லை. மணமகனின் பெயரும் அவன் யார் என்பதும் அவர்கள் அனைவருக்கும் தெரியும்.

தங்கள் கண்ணுக்குப் புலப்படாமல் அங்கு மணமகன் வீற்றிருப்பதாகவே அவர்கள் கருதினர். அந்த மணமகன் வேறுயாருமல்ல. அவ்வட்டாரத்தில் பிரசித்தி பெற்ற பேய்தான் அவன். இந்தப் பேயின் பெயர் சின்ட்வின் பகாங்கி ஆஷின் தாகின் கியாவ்கி என்பதாகும். இந்தப் பேய்க்கும் மேற்படி பெண்ணுக்கும்தான் இவ்வளவு கோலாகலமாகவும் ஆடம்பரமாகவும் திருமணம் நடைபெற்றது. திருமணம் வைபவம் தொடர்ந்து சாந்தி வைபவமும் நடந்தது. வெள்ளைநிற மஸ்லின் ஜாக்கெட், பச்சை நிற மேலங்கி, வைரநெக்லஸ், தங்கவளையல், அழகிய கூந்தல் அலங்காரம் ஆகியவற்றுடன் அழகு சொட்டும் அப்பெண் ஒருமெத்தையில் உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் உள்ள மெத்தையில் அவளது கணவன் வீற்றிருந்ததாக அனைவரும் கருதினர். குடும்பப் பெரியவர்கள் அந்த மணமகனின் கையையும் மணமகளின் கையையும் ஒருவெள்ளிப் பாத்திரத்துக்குள்ளாக ஒன்று சேர்ப்பதுபோல பாவனை செய்தனர். இவ்வாறு இந்த வைபவமும் நடந்தது.

இப்பெண், பேய்க்கு மணமுடிக்கப்பட்டதற்குக் காரணம் இதுதான். மாஷ்வேலோன் நீண்ட நாளாக தீராத நோயினல் அவதிப்பட்டு வந்தாள். டாக்டர்களால் இதைக் குணப்படுத்த முடியவில்லை. ஒரு நாள் இப்பெண்ணுக்குத் திடீரென 'சாமி' வந்தது. 'நான்தான் சின்ட்வின் பகாங்கி ஆஷின் தாகின் கியாவகி பேசுகிறேன். எனக்குப் பூஜைபோட வேண்டும்" என்று அப்பெண் ஆண்பேசுவது போன்றகுரலில் கூறினள். பிறகு இதன்படி அப்பேயின் படத்தை வரைந்து அதன் முன்னல் பூஜை போடப்பட்டது. ஆயினும் அவள் குணமாகவில்லை. அவளது உடல்நிலை மோசமாகியது.

இந்த நிலையில் பலவாரங்களுக்குப் பிறகு இப்பெண்ணுக்கு மீண்டும் 'சாமி' வந்தது.

"இப்பெண்ணை எனக்குப் பகிரங்கமாகக் கலியாணம் செய்து கொடுங்கள்" என்று அவள்மூலம் அந்தப் 'பேய்' கூறியது.

எப்படியாவது பெண்பிழைத்தால் போதும் என்ற எண்ணத்தில் பெண்ணின் தகப்பனர் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்து அதை, சாதாரணக்கல்யாணத்தைவிடமிகச் சிறப்பாக நடத்தினர். பேய்க்கும் பெண்ணுக்கும் நடந்த இக்கல்யாணத்திற்கு உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பளபளக்கும் எழுத்துக்களைக் கொண்ட கல்யாண அழைப்பிதழ் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டது. பேயை மணந்த மாஷ்வேலோன் பீடை நீங்கிக் குணமடைந்து வருவதாகச் சொல்லபடுகிறது.

## 'சமயக் கல்வி வேண்டும்'

கண்டி, வெள்ளி

'எந்த மனிதனுலும், அவனிடத்தில் எவ்வளவு பணமிருந்த போதிலும், அவன் சமயவழி நின்று நல்லவனுக ஒழுகாவிடில் அவனல் பயனில்லை' என்று பிரதம நீதியரசர் திரு. எஸ். பஸநாயக்கா ஞாயிறு பாடசாலை பரிசளிப்பு விழா வொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். குழந்தைகளுக்கு சமயக் கல்வியைப் போதித்து அவர்களை நாட்டிற்கு நன்மை செய்யக்கூடியவர்களாக வளர்க்கவேண்டுமென்றும் நீதியரசர் பெற்றோர்களைக் கேட்டுக் கொண்டார்.

## பிரதமரிடம் ஆட்சேபிக்கப்படும்

கொழும்பு, வெள்ளி

அப்போதிக்கரிமார்களின் முன்னேற்றத்துக்குத் தடை முயற்சி செய்யப்படுவதையிட்டு அரசாங்க அப்போதிக்கரிகள் தொழிற் சங்கம் பிரதமருக்கு ஆட்சேபம் தெரிவிக்கவிருக்கின்றது. மூன்று வருடப் பயிற்சியுள்ள 'டிப்ளமோ' தராதரம் உள்ளவர்கள் மற்ற நாடுகளில் வைத்தியர்களாக பரீட்சிக்க அனுமதிக்கப்படுவதாகவும், ஆனல் வைத்திய கல்லூரிச் சபையில் அப்போதிக்கரிமார்களின் முன்னேற்றத்துக்குத் தடைவிதிக்க இயக்கம் ஒன்று நடந்துவருவதாகவும் சங்கம் தெரிவிக்கின்றது.

## பஸ் நொறுங்கியது

புசல்லாவை, வெள்ளி

கம்பளையிலிருந்து புசல்லாவை சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று கண்டி-நுவரெலியா வீதியில் செங்குத்தான பாறையில் சறுக்குண்டு கீழே விழுந்து நொறுங்கியது. புதன்கிழமை அதிகாலை இரண்டரை மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. புசல்லாவையில் நடக்கும் வெசாக் கொண்டாட்டங்களை பார்ப்பதற்காகப் இப்பஸ்ஸில் சாரதியும், கண்டக்டரும் உட்பட 21 பிரயாணிகள் சென்றனர். பிரயாணிகள் எல்லோருக்கும் காயமேற்பட்டது:

# ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் அரசியல்கட்சிகள் அக்கறை

கொழும்பு, வெள்ளி

பார்லிமெண்ட் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் இப்பொழுது அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

அடுத்த மாதம் 3 ஸ்தலஸ்தாபன சபைகளின் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

புதிதாக மாநகரசபை அந்தஸ்து பெற்ற மாத்தளை, பதுளைத் தேர்தல்ளிகல் முக்கிய அரசியல் கட்சிகள் யாவும் தங்கள் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளன.

இந்தப் பகுதிகளில் தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகிவிட்டது.

கேகாலை, பலாங்கொடை, மட்டக்களப்பு, பருத்தித்துறை, குளியாப்பிட்டி, ஹப்புத்தளை ஆகிய நகரசபைத் தேர்தல்கள் ஜூன் மாத முடிவுக்குள் நடைபெறவிருக்கின்றன. இந்த தேர்தல்களிலும் அரசியல் கட்சிகளுக்கிடையில் பெரும் போட்டியிருக்குமென எதிர்பார்க்கப்படுகிது.

## சோஷலிஸ அடிப்படையில் கிராமசேவகர்கள்

தங்காலை, வெள்ளி

"காலனி ஆட்சி காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வந்த கிராமத்தலைமைக் காரர்முறை ஒழிககப்பட்டுவிட்டது. பொது மக்களில் அக்கறை காட்டக்கூடிய கிராம சேவகர்கள் சோஷலிஸ அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்" என்று பெலியட்ட எம். பி. திரு. டி. ஏ. ராஜபக்ச கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

## குற்றத்தை ஒப்புக்கொண்டார்

மாவிட்டபுரம், வெள்ளி

வசாவிளானைச் சேர்ந்த கந்தன் பசுவன் அதே ஊரைச் சேர்ந்த வல்லி வயித்தியை பாளைக்கத்தியால் வெட்டிக் காயமேற்படுத்தியதாக காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜண்ட் திரு. தம்பிப்பிள்ளையினல் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி தான் முன்னர்சுற்றவாளியென்றுகூறியதை வாபஸ்பெற்று குற்றவாளியென்ருர். நீதிபதி அதை ஏற்று எதிரியை 100 ருபா அபராதம் செலுத்தும்படியும் அதை வழக்காளிக்கு நஷ்டஈடாகக் கொடுக்கும்படியும் கட்டளையிட்டார்.

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 11-5-63

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 பிறிம்ரோஸ் ஜே. காசிநாதர்—வயலின்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கே. சீதாராமசாஸ்திரிகள்—பேச்சு, 9-30 என். கே. பத்மநாதன்—பாட்டு.

### ஞாயிறு 12-5-63

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரைக்குரல், 6-10 குரல்வகை, 6-30 ஈ. சுப்பையா—கிளாரினெட்.

இரவு 7-00 மாதர் கேட்டவை, 7-30 எஸ். எம். மூத்ததம்பி—பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'சாந்தி'—நாடகம், 9-45 நிலைய ஒழிப்பதிவுகள்.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

### சனி 11-5-63

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 குரலிசை.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரலிசை, 2-10 புல்லாங்குழல்,

மாலை 5-15 கே. வி. காளிதாஸ்—பாட்டு, 6-30 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 "மன்னித்துவிடு மனிதனுவாய்"—நாடகம், 8-40 தேசபக்திப் பாடல்கள், 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

### ஞாயிறு 12-5-63

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள், 8-15 எஸ். கல்யாணராமன்—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 பாட்டு.

மாலை 5-15 தஞ்சாவூர் என். வீராசாமி—கிளாரினெட், 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கொட்டுமுரசே—சித்திரம், 7-45 மதுரை மாரியப்பசாமி—பாட்டு, 8-45 தஞ்சாவூர் என். வீராசாமி—கிளாரினெட், 9-15 தேசபக்திப் பாடல்கள், 9-45 அருணகிரிநாதர் இசை விழா.

# தேசிய விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் தேசிய விளையாட்டுவிழா இன்று நடைபெறுகிறது.

காலையில் 15 மைல் மரதன் ஓட்டப் போட்டி யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ். மரியநாயகத்தினுல் ஆரம்பித்துவைக்கப்படும். இந்தப் போட்டியில் திரு. என். எதிர்வீரசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பிற்பகல் மூன்று மணிக்கு மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் ஆரம்பித்து வைப்பார்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கீரிமலையில் நீச்சலப்போட்டி நடைபெறும்.

# கல்வி இலாகா வெற்றி

வவனியா, வெள்ளி

வவனியா நீர்ப்பாசன இலாகா கழகத்தினுல் நடத்தப்படும் அம்பலவாணர் வெற்றிக்கிண்ணக் கைப்பந்தாட்டப் போட்டியில் கல்வி இலாகாவுக்கும், பொலிஸ் இலாகாவுக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் கல்வி இலாகா இரு ஆட்டங்களிலும் முறையே 15-0, 15-10 புள்ளிகளைப்பெற்று வெற்றியீட்டியது.

மத்தியஸ்தராக திரு. இராசசிங்கம் கடமையாற்றினர்.

# விற்பனையாளர் அதிருப்தி

கொழும்பு, வெள்ளி

பெட்ரோலிய கூட்டுஸ்தாபனத்தின் பெட்ரோல் விற்பனையாளர்களுக்கு கூட்டுஸ்தாபனத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளது. கம்பனிகளிடம் இருக்கும்போது ஒரு கலனுக்கு 22 1/2 சதம் தமக்கு கமிஷன் கொடுக்கப்பட்டதாகவும் இப்பொழுது ஒரு கலனுக்கு 7 1/2 சதமே கமிஷன் கொடுக்கப்படுவதாகவும் விற்பனையாளர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். ஒரு ஏஜண்டின் விற்பனைத் தொகை குறைந்தவுடன் ஏஜன்சியை ஐக்கிய சங்கங்களுக்கு மாற்றுவதாகவும், எண்ணெய் விநியோகதலைத் விஸதரிப்பதில் கூட்டுஸ்தாபன அதிகாரிகள் அதிக கவனம் எடுக்கவில்லை என்றும் விற்பனையாளர் சங்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

# இந்தியப்பிரச்னையால் ஆட்சியை கைப்பற்ற முயலும் 'பொம்மை ஹிட்லர்'

பதுளை, வெள்ளி

"ஜாதிக விமுக்தி பெரமுனையின் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்ன ஒரு 'பொம்மை ஹிட்லர்'. மக்களிடம் பொய்யான தகவல்களையும், நம்பிக்கைகளையும் பரப்பி ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கிருர் அவர். இந்தியப் பிரச்னையை விசேஷமாக எடுத்துக்கொள்வதற்கு இதுவே முக்கிய காரணமாகும்."

இவ்வாறு மகியங்கன எம். பி. திரு. பி. ஜே. செனிவிரத்ன பதுளை மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். மறு முறையும் சிங்கள வாலிபர்களை கஷ்டத்துக்குள்ளாக்குவதற்கே திரு. ராஜரத்ன முயற்சித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக்கட்சி செய்த குழப்பங்களை ஐக்கிய தேசியக் கட்சியே தெளிவு படுத்தும் எனவும் திரு. செனிவிரத்ன குறிப்பிட்டார்.

வேறுபலரும் கூட்டத்தில் பேசினர்.

# அசம்பாவிதம் இல்லை

அலபாமா, மே 10

பர்மிங்காம் நகரில் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்த நீக்ரோக்களின் ஆர்ப்பாட்டம் இப்பொழுது வெகுவாகக் குறைந்துள்ளது. நேற்று எந்தவிதமான அசம்பாவிதமும் நிகழவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹார்லிக்ஸ் அளிக்கும் நன்மைக்கு ஒரு உதாரணம்:




ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

# 500 ரூபா நகைத் தடை முடிவு மாறுது

## மந்திரிசபையின் தீர்மானம் இறுதியானது

கொழும்பு, வெள்ளி

இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்குச் செல்லும் பெண்கள் 500 ரூபாய்க்கு மேற்பட்ட நகைகளை அணிந்து செல்லக்கூடாதென்ற அரசாங்க அறிவிப்பு இறுதியான ஒரு முடிவெனவும் அதை இப்போது ரத்துச் செய்ய முடியாதெனவும் செலாவணிக்கட்டுப்பாட்டு இலாகாவின் புதிய 'கண்ட்ரோலர்' திரு. எஸ். ஈ. பி. ஜான்ஸ் தெரிவித்திருக்கிறார்.

இந்த முடிவு மந்திரி சபையினால் ஏகமனதாகச் செய்யப்பட்ட ஒன்றென்றும் இந்தச் சூழ்நிலையில் தாம் எதையும் செய்வதற்கில்லையெனவும் திரு. ஜான்ஸ் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இந்திய வர்த்தக சம்மேளனமும் திரு. எஸ். தொண்டமான், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியவர்களும் அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தார்கள். இந்திய வர்த்தக சம்மேளனத்தின் தூதுகோஷ்டி ஒன்று செலாவணிக்கட்டுப்பாட்டுக் 'கண்ட்ரோலர்' திரு. ஜான்ஸை சென்ற வாரத்தில் பேட்டிகண்டுமிருந்தது.

இந்தச் சந்திப்பின்போது தான் திரு. ஜான்ஸ் "அரசாங்கத்தின் முடிவு இறுதியானது" என்று தெரிவித்தார்.

### தாலியும் தமிழ்ப் பெண்களும்

தமிழ் பெண்களைப் பொறுத்த மட்டிலாவது இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமெனவும் அல்லது அவர்கள் தாலி அணிந்து கொண்டு செல்ல முடியாத நிலைக்குள்ளாகிவிடுவார்களெனவும் தூதுக்கோஷ்டியினர் சுட்டிக்காட்டினர்.

தமிழ்ப் பெண்கள் மாத்திரம் இதனால் பாதிக்கப்படவில்லை. முஸ்லிம் பெண்களும் மதசம்பிரதாயத்துக்கமைந்த முறையில் தாலி அணிவதாகவும் கன்ட்ரோலருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஒருமுறை தாலியை கழுத்வுக்கு கடத்தப்படுகிறதென் ற

தில் அணிந்த பெண்கள் அதைப் புருஷன் இறக்கும் வரையில் கழற்றுவதில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. பிரதானமாக இலங்கையிலிருந்து யாத்திரைக்காகத் தமிழ்ப் பெண்கள் இந்தியாவுக்குச் செல்வதால் இந்தப் புதிய சட்டம் அவர்களுக்கு ஒருதடையாக அமைந்திருக்கிறதெனவும் தூதுகோஷ்டியினர் சுட்டிக்காட்டினர்.

இவைகளுக்குப் பதிலளிக்குமுகமாகத்தான் திரு. ஜோன்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### தடைச்சட்டம் தளர்த்தப்படாது

பவுன் நகைகள் மூலம் ஏராளமான பணம் இந்தியா

புகார்களைத் தொடர்ந்துதான் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்ததாகத் தெரிய வருகிறது. இந்தியாவில் 14 காரட் தங்கம் புழக்கத்துக்கு வந்திருப்பதால் இங்கிருந்து சுத்தமான தங்கம் அங்கு கடத்தப்படுவதன் மூலம் அதைக் கொண்டு செல்பவர்கள் பெருமளவு பணம் சம்பாதிக்கிறார்கள் எனவும் அரசாங்கம் கருதுகிறது.

# ஐந்துசந்தி விபத்துபற்றி ஸ்தலத்தில் விசாரணை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட் இவ்வாரம் சில நிமிடங்களுக்கு திரு. டபிள்யு. அரசு வால்டன் தலைமையில் முஸ்லிம் வட்டார ஐந்து சந்தியில் நடைபெற்றது.

சென்ற பெப்ரவரி 26-ந் திகதி அச்சந்தியில் மோட்டார் விபத்திற்குட்பட்டு ஜபீர் என்ற 12 வயதுப் பையன் இறந்ததையிட்டு நடைபெறும் விசாரணையின் பகுதியாகவே கோர்ட்டார் அச்சந்தியில் விசாரணை நடாத்தவேண்டியதாயிருந்தது.

இவ்வழக்கில், யாழ்ப்பாணம் பொலிசாரால் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திரு. கறுவல் மார்க்கண்டு என்ற லொறிச் சாரதி கவலையீனமாக லொறியைச் செலுத்தி ஜபீருக்கு மரணத்தை விளைவித்ததாகவும் பைசா என்ற சிறுமிக்குப் படுகாயம் விளைவித்ததாகவும் திரு. அரசு வால்டன் முன்னிலையில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இச்சம்பவம் நடந்திருக்கக்கூடிய விதத்தை நேரில் பரிசீலனை செய்வதற்கே கோர்ட்டு விசாரணை ஐந்து சந்தியில் நடைபெற்றது.

எதிரியின் சார்பில் திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையின்மீது திரு. எஸ். நாகராசா ஆஜரானர்.

மேல் விசாரணை இம்மாதம் 13-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# வவனிக்குள சிவாலயம்

## திருப்பணிச்சபை நிறுவப்பட்டது

வவனியா, வெள்ளி

சிவாலயத் திருப்பணிச்சபை சிவாலய மைதானத்தில் சமீபத்தில் வவனிக்குளம் நீர்ப்பாசன அதிபர் திரு. சி.க. கந்தையா தலைமையில் நடைபெற்றது. கோவிலின் பூர்வீக வரலாற்றைப் பற்றியும் அதனைக் கட்டி எழுப்பிப் பூசிக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியும் திருமலை நீர்ப்பாசனப் பகுதி பிரதம லிகிதர் திரு. மு. வயிரவப்பிள்ளை சொற்பொழிவாற்றினர். கல்விளான் திரு. வி. நாகலிங்கம் கோப்பாய் திரு.வி.எஸ்.நடராசா ஆகியோர் பக்திப்பாடல்கள் பாடினர். பண்டிதர் மு. ஆறுமுகன், திரு. சி. துரைராஜசிங்கம், திரு. சா. வைரமுத்து திரு. க. சோமசுந்தரம் ஆசிரியர் திரு. சி. குமாரசாமி, செல்லப்பா சுவாமிகள் ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

பின்வருவோர் வவனிக்குள சிவாலய திருப்பணிச்சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர் உயர் திரு. ம. ஸ்ரீகாந்தா, துணைக்காப்பாளர் திரு. ச. ஆறுமுகம், தலைவர் திரு. சி. க. கந்தையா (வவனிக்குளம் நீர்ப்பாசன அதிபர்) உபதலைவர் திரு. வி. எஸ். நடராசா, பண்டிதர் மு. ஆறுமுகன், திரு. க. சோமசுந்தரம், பொருளாளர் திரு. ச. அருளம்பலம், மற்றும் இருபத்திநன்கு அங்கத்தவர்கள் நிருவாகசபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டனர்.

# பெற்ருேரை இழந்த குழந்தை மேரி

## கண்களையும் இழக்கவிருக்கிறது!

யாழ்ப்பாணம், சனி

தனது நான்காவது வயதிலேயே தாய், தந்தையை இழந்து, யாருமற்ற அனாதையாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் கருகில் அழுது கண்ணீர் வடித்துக்கொண்டிருந்த ஒரு பெண்குழந்தை இன்று தனது கண்களையும் இழக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

கடந்த வருடம் மே மாதம் 15-ம் திகதி சுமார் நான்கு வயது நிரம்பிய ஜோய்ஸ் மேரி என்ற பெண் குழந்தையொன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக் கருகில் யாருமற்ற அனாதையாக அழுது கொண்டிருந்து தேடுவாரற்ற நிலையில் இருந்த இந்தக் குழந்தையைக் கண்ட தாவடி தெற்கைச் சேர்ந்த ஆர். சுந்தரலிங்கம் என்பவர் குழந்தையை அன்புடன் அழைத்து விபரம் கேட்டார். ஆனால் குழந்தைக்கோ தனது தந்தையார்? தாய் யார்? என்று கூறமுடியவில்லை. தனது கேள்விகளுக்குப் பதில் கூறாது தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்த அந்தக் குழந்தையின் பரிதாப நிலையைக் கண்ட சுந்தரலிங்கம் அந்தக் குழந்தையை அரியாலை அனாதை நிலையத்துக்கு அழைத்துச் சென்றார்.

அரியாலை அனாதை நிலையத்தில் இந்தக் குழந்தை அனுமதிக்கப்பட்டது. குழந்தையின் பெற்றோரைத் தேடும் முயற்சியில் அனாதை நிலைய அதிகாரிகள் எவ்வளவோ ஈடுபட்டும் பலன் கிடைக்கவில்லை. கடந்த ஒரு வருடகாலமாக இக்குழந்தையின் பெற்றோரைத் தேடியும் குழந்தையின் பெற்றோர் யார் என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஏற்கனவே இக்குழந்தையின் கண்ணில் ஏற்பட்ட வருத்தம் அதிகரித்து வருகிறதாகதெரிய வருகிறது. குழந்தையின் கண்களுக்கு சிகிச்சை நடைபெற்று வருகிறதென்றும் ஆனால் குழந்தையின் நலன் கருதி யாராவது கண்தானம் அளிக்க முன்வராவிட்டால், குழந்தையின் இரண்டு கண்களையும் பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டு விடுமெனவும் கூறப்படுகிறது.

---

## மானிப்பாய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பாதையைத் தவிர, மானிப்பாய் ஆஸ்பத்திரியிலிருந்து புறப்படும் வேறு 4 பஸ்கள், பிரயாணிகளின் வசதிகளை முன்னிட்டு சுதுமலை, தாவடி, கொக்குவில் வழியாக வந்து கே. கே. எஸ். வீதி வழியாக யாழ்ப்பாணம் பஸ் நிலயத்தை வந்தடையும். பின்னர் இந்த பஸ் யாழ்ப்பாணம் பஸ் நிலயத்திலிருந்து கச்சேரிக்குச் செல்லும்.

மொத்தமாக ஒவ்வொரு நாளும் மானிப்பாய்—யாழ்ப்பாணம் கச்சேரிக்கு எட்டு பஸ்கள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும். இந்த பஸ்கள், ஒவ்வொரு பத்து நிமிடத்துக்குப் பிறகும் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும்.

புதிய பஸ் சேவைகள், இம்மாதம் 15-ம் திகதி ஆரம்பிக்கப்படுவதன்மூலம் மானிப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் கச்சேரிக்குச் செல்பவர்கள் இனிமேல் எந்தவித கஷ்டமுமின்றி பிரயாணம் செய்யலாம்.

---

## விலாசங்கள் தெளிவில்லை

கொழும்பு, வெள்ளி

விநியோகிக்கப்படாத தபால், பொதிகள் பெருமளவில் கொழும்பு பெரியதபால் கந்தோரில் குவிந்துள்ளன. 1962—63-ம் ஆண்டில் முன்னைய ஆண்டுகளில் விநியோகிக்கப்படாத தபால், பொதிகள் தொகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 1961—62-ம் வருடத்தில் விநியோகிக்கப்படாத பதிவு செய்யப்படாத தபால்களின் தொகை 666,641 ஆகும். அந்த வருடத்தில் 12,489 பதிவு செய்யப்பட்ட தபால்களும், 319 பார்சல்களும் விநியோகம் செய்யப்படவில்லை. விலாசங்கள் தெளிவாக எழுதப்படாமலிருப்பதாலும், பிழையான விலாசங்கள் எழுதப்படுவதாலுமே இவ்விதம் கடிதங்கள் விநியோகம் செய்யப்படாமலிருப்பதாக தபால் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

## குடாக்கரைப்பகுதி காணிக்கச்சேரி

திருமலை, வெள்ளி

குடாக்கரைப்பகுதியைச் சேர்ந்த வேப்பங்குடா, நாச்சிக்குடா, நெடுங்குடா, ஆகிய பகுதிகளில் ஆளுக்கு அரைக்கால் ஏக்கர் வீதம் 150 பேருக்கு காணிகள் வழங்க திருமலை வட்டார காணி உத்தியோகத்தரால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வைபவத்தில் மூதூர் எம். பி.க்கள் ஜனாப் மு. எ. முகமதலியும் ஜனாப். ஏ. எல். மஜீதும் கலந்து கொண்டனர். பரிசீலனை இம்மாதம் 15-ம் திகதி வெள்ளமணல் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

வெற்றிகரமான 2-வது வாரம்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீகல் (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்

★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை!



சிவாஜி கணேசன்
S. S. ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா

நடித்த

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனோகரா (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன் பத்மினி நடித்த

தூக்கு தூக்கி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மே மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.